உ

கடவுள் துணை.

செந்தமிழ்.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தினின்று மாதந்தோறும் வெளிவரும்

ஒரு தமிழ்ப்பத்திரிகை.

முப்பத்தைந்தாந்தொகுதி.

Vol. 35.

ஈசுவர—வெகுதானிய ௵

1937—1938.

பத்திராசிரியர்—திரு. நாராயணையங்கார்.

மதுரைத்தமிழ்ச்சங்கமுத்திராசாலை,

மதுரை.

முப்பத்தைந்தாந் தொகுதியுள்ளுறை.

விஷயம்.	எழுதியவர்.	பக்கம்.
அநுதாபக்குறிப்பு:—	பத்திராசிரியர்.	௩0௪, ௩௫௧
அபிஷேகநாடகம்:—	ஸ்ரீமத். V. S. ராமஸ்வாமி சாஸ்திரியார், B.A., B.L.	௨௬௫, ௩0௫, ௩௫௩, ௩அ௫, ௪௩௩.
இரங்கற்பா:—	ஸ்ரீமத். அபிநவகாளமேகம் ஸ்ரீ. அநந்தகிருஷ்ணையங்கார்.	௩௫௨
இரசை வடமலையப்ப பிள்ளையன்:—	ஸ்ரீமத். S. சோமசுந்தரதேசிகர்	௪0௯
உதிர்மலர்மாலை:—	ஸ்ரீமத். க. சு. நவநீதகிருஷ்ணபாரதியார்	௪௧எ
ஒரு குறிப்பு:—	உதவிப்பத்திராசிரியர்.	௨௪அ
ஒருபெரியதிருமடற்கதை:—	ஸ்ரீமத். S. சோமசுந்தரதேசிகர்.	௨௯௨
ஒரு விளம்பரம்:—	கரந்தைத்தமிழ்ச்சங்கத்தார்	௧௯௬
ஓர் அருஞ்செய்யுளுரை:—	ஸ்ரீமத். க. குருமூர்த்தி ஐயர்.	௩௧
கம்பராமாயண சாரம்:—	ஸ்ரீமத். ராவ்ஸாஹெப். வெ. ப. சுப்பிரமணிய முதலியார்.	௧, ௪எ, எஎ, ௯எ, ௧௨௯, ௧௫௩, ௧௯௩
கர்ணபாரம்:—	ஸ்ரீமத். V. S. ராமஸ்வாமிசாஸ்திரியார். B.A., B.L.	௩௩
கரந்தைத்தமிழ்ச்சங்க வெள்ளிவிழா அழைப்பு:—	கரந்தைத்தமிழ்ச்சங்கத்தார்.	௧அஎ
காவை வடமலையப்ப பிள்ளையன்:—	ஸ்ரீமத். S. சோமசுந்தரதேசிகர்.	௨௨௫
சீவகசிந்தாமணி உரைநயம்:—	ஸ்ரீமத். சி. கணேசையர்	௧௯எ
சேக்கிழார்காலம்:—	ஸ்ரீமத். வை. சுந்தரேசவாண்டையார்	௨௩௫
நம்முன்னோர்களியற்றிய ராஜநீதி நூல்கள்:—	ஸ்ரீமத் சி. கு. நாராயணசாமிமுதலியார்	௨௪௧, ௨அ௬
பழநி மாம்பழக்கவிச்சிங்க நாவலர்சரிதம்:—	ஷை	௬, ௫எ, ௬௫, ௧0௫, ௧௫௯
பழனிக்கோவை:—	T. K. இராமாநுஜையங்கார், உதவிப்பத்திராசிரியர்.	௨௪௯, ௩௨௫, ௩எ௬, ௩௯எ, ௪௫௯
பாஞ்சராத்திரம்:—	ஸ்ரீமத். V. S. ராமஸ்வாமிசாஸ்திரியார் B.A., B.L.	௬எ

பிரதிஜ்ஞா யௌகந்தராயணம்:— } ஸ்ரீமத். V. S. இராமஸ்வாமிசாஸ்திரியார் B.A., B.L. அகூ, ககரு, கருஎ, கசுரு, உ0க

புறத்திரட்டு:— பத்திராசிரியர். உஅகூ

புறநானூற்றுச் செய்யுட்சிறப்பு:— } ஸ்ரீமத். ஜெ. நாராயணசுந்தரமையங்கார். சசக

மதிப்புரை:— ருஉ, கூரு, கருஉ, கஅரு, ருசரு, ருஅக, சஎச

மதுரைத்தமிழ்ச்சங்கநிர்வாகஸபைத்தீர்மானங்கள்:— ருசஅ

மாதைத் திருவேங்கடநாதர்:—ஸ்ரீமத். S. சோமசுந்தரதேசிகர். உகூரு

யவனர்வரலாறு:— } ஸ்ரீமத். த. இராமநாதபிள்ளை, B.A. (LOND.) உகூ, ருக, எகூ, கசகூ, கஎரு, உகரு, உஎஎ, ருகஎ, ருசுஎ, சஉரு, சசகூ

வரவேற்புப் பத்திரம்:— } T. K. இராமாநுஜையங்கார், உதவிப்பத்திராசிரியர். ஸ்ரீமத். V. S. ராமஸ்வாமி சாஸ்திரியார் B.A., B.L. ,, சு. நல்லசிவன்பிள்ளை. சஎ0—சஎரு

அநுபந்தம்.

I. விஷயங்கள்.

ஆங்கிலகலாசாலைத்தமிழ்ப்பரீக்ஷைத்தேர்ச்சிக்குறிப்பு:—(பகுதி-க0) பக். 1—14

ஒரு குறிப்பு:—உதவிப்பத்திராசிரியர். (பகுதி-கூ) பக். 1—2

தனித்தமிழ்ப்பரீக்ஷைத்தேர்ச்சிக்குறிப்பு:—(பகுதி-க0) பக். 1—2

மதுரைத்தமிழ்ச்சங்கத்தின் வரவுசெலவுகணக்கு:— பகுதி கூ—கஉ

II. நூல்கள்.

[முற்றுப்பெற்றது.]

சந்திரகுப்தன்:— } ஸ்ரீமத். N. R. கிருஷ்ணஸ்வாமி ஐயங்கார், B.A., B.L. பகுதி. க—ரு

[முற்றுப்பெறாதது.]

குருகைமான்மியம்:—T. K. இராமாநுஜையங்கார், உதவிப்பத்திராசிரியர். பகுதி. க—கூ

கடவுள் துணை.

செந்தமிழ்.

தொகுதி-௩௫] ஈசுவரஹு கார்த்திகைமீ [பகுதி-௧
Vol. 35. November—December 1937. No. 1.

கம்பராமாயணசாரம்.

[௩௪-ஆம் தொகுதியின் ௩௭௪-ஆம் பக்கத்தொடர்ச்சி.]

இராமன் விபீடணனுக்கு அடைக்கலமளிப்பது கடமையெனல்

18 கருத்துற நோக்கிப் போந்த காலமு[1] நன்று காதல்
அருத்தியு மரசின் மேற்றே[2] யறிவினுக் கவதி யில்லை
பெருத்துயர்[3] தவத்தி னனும்[4] பிழைப்பில[5] னென்னும் பெற்றி
தெரித்தன[6] னகு மன்றே நம்வயிற் சேர்ந்த செய்கை.

கொண்டுகூட்டு: 'கருத்து உற நோக்கிப் போந்தகாலமும் நன்று காதல் அருத்தியும் அரசின்மேற்றே. அறிவினுக்கு அவதியில்லை. பெருத்து உயர் தவத்தினனும் பிழைப்பு இலன் என்னும் பெற்றி(யை) நம்வயின் சேர்ந்த செய்கை(யால்) தெரித்தனன் ஆகும்.'

பொருள்: '(இவ் விபீடணன் தன்) மனத்துள்ளே அழுந்த ஆராய்ந்து (நம்மிடம்) வந்த காலம் (காரியசாதனைக்குத்) தகுந்த காலமே. இவனது ஆசை அரசாட்சியின்மேலுள்ளது. இவன் அறிவுக்கு எல்லையில்லை (அபார விவேகி). இவன் (மிகவும் உயர்ந்த விவேகத்தினால் குறித்ததை அடைதலில் தப்பாதிருத்தல்போல் மிகுந்துயர்ந்த தவத்தினாலும் (இலட்சியத்தை எய்துதலில்) தவறு இல்லாதவனென்னும் தன்மையை நம்மிடம் (அடைக்கலமாக வந்து) சேர்ந்த செய்கையினால் தெரியச்செய்தவனவன்.'

*

கருத்து - மனம். உற - மிக; பொருந்த. போந்த - வந்த. காதல் அருத்தி, ஆசையென்னும் ஒருபொருள்குறித்தவை: மீமிசைச்சொல். மேற்று - மேலது. அவதி - எல்லே. பிழைப்பு - பிழைத்தல் - தவறுதல். பெற்றி - தன்மை. ஆகும் - ஆவன். அன்று ஏ, அசைகள்; அல்லவா என்ற பொருளுடையதாகவும் கொள்ளலாம். வயின் - இடம். செய்கை, செய்கை யால் என்ற பொருள்படநின்றது: மூன்றும்வேற்றுமைத்தொகை. 'திருத்தி து' என்ற பாடத்துக்குச் 'செவ்வனே விளக்கும்' என்று பொருள் கூறப் பட்டிருக்கிறது.

பாடபேதம்: [1] காலத்து. [2] அருத்தியின் மாசு மேற்றே, அருத்தியு மாசு வேறே. [3] பெருத்துறை. [4] தவத்தினும், அரசினும். [5] இலது. தெரித்தனம், திருத்தியது.

['அனுமான் ஆராய்ந்து கூறியதே தக்கது. அவன் கூறியதற்கு மாறுனவகையால் வெற்றி நிச்சயமாகக் கிடைக்குமாஞலும், அது எனக்கு உடன்பாடன்று. அடைக்கலமடைந்தவனைக் கைவிட லால், வெற்றியும் வாழ்வும் கைகூடுமாஞலும் அதனை விரும்பேன்: அவனைக் கைக்கொள்ளலால் தோல்வியும் சாவும் நேருமெனினும் பொருந்தேன்.* "அடைக்கலம்!" என்று அடைந்தவனைப் பழக்க மில்லாதவனென்ருவது பாதகனென்ருவது தள்ளுதல் தகாது. அவனை அன்புசெய்யும் துணைவனுகக் கருதல்வேண்டும். அதற்கு மாருக அவன், ஒருகால் துரோகஞ் செய்வாஞனல், பழி, ஆதரிக்கப் பெற்றுத் துரோகஞ்செய்த அவனைச் சேருமேயன்றி நம்மைச் சேராது: ஆதரித்த நம்மைச் சேர்வது புகழே.]

9 பிறந்தநாட் டொடங்கி யாரும் துலேபுக்க பெரியோன் பேற்றி
மறந்தநா ளுண்டோ வென்னைச் சரணென வாழ்கின் ருனைத்
துறந்தநாட் கின்று வந்து[1] துன்னிஞன் சூழ்ச்சி யாலே
இறந்தநா ளன்றே[2] வென்று மிருந்த[3]நா ளாவ[4] தேன்ருன்.[5]

* வெற்றியே பெறுக, தோற்க; வீக, வீயாது வாழ்க: பற்றுத லன்றி யுண்டோ ? அடைக்கலம் பகர்கின்ருனை. இப்படலம் கoஅ.

கோண்டுகூட்டு: 'துலைபுக்க பெரியோன்பெற்றி(யை) யாரும்(அறி... பிறந்நாள் தொடங்கி மறந்தநாள் உளதோ? என்னைச் சரண் என வா... கின்றானைத் துறந்தநாட்கு, இன்று வந்து துன்னினான் சூழ்ச்சியாலே இறந்... நாளன்றோ என்றும் இருந்த நாளாவது' என்றான்.

பொருள்: '(ஒரு பருந்தினால் துரத்தப்பட்ட புறாவொன்... அபயமென்றடையப் பருந்துவிரும்பியபடி, அப்புறா வைக்கப்பட்... தராசுத்தட்டுக்கு எதிர்த்தட்டிலே தன் சதையை அரிந்தரிந்... வைக்கப் போதாமைகண்டு தானே அந்தத்) தராசுத்தட்டிலே... ஏறிய உயர்ந்தோனான சிபிச்சக்கரவர்த்தியின்பெருமையை யாரு... (அறிவு) தோன்றியநாள்முதலாக மறந்தநாள் உண்டோ? (அ... படிப்பட்ட பெரியோன்வழித்தோன்றிய யான் எனக்குக் கேடுவர... மென்றெண்ணி அடைக்கலம்புகுந்த எவனையும் தள்ளேன்... யானே அடைக்கலமென்று (என்னைப் பற்றுக்கோடாகக்கொண்... உயிர்வாழ்(தற்குக்கருது)கின்ற ஒருவனைக் (கைவிடுவேனானால், அ... படிக் கைவிட்டநாள், என் புகழுடம்பு இறந்தநாளாம். அடைக்க... மடைந்தவனை)க் கைவிட்டநாளைக்காட்டிலும், இன்று (நம்மிட... அடைக்கலமாக) வந்துசேர்ந்தவன் (ஆன இவனுக்கு நான் அடை... கலமளித்தபின் இவன் செய்யும்) தந்திரத்தினால் (நான் இறந்... னானால், அதாவது என் பூதவுடம்பு இறந்ததானால், அந்த) இற... நாளல்லவா, (என் புகழுடம்பு) என்றும் (நிலைபெற்றிருக்க... தொடங்கி) இருக்கும்நாளாவது' என்றான்.

துலை - துலா - துலாக்கோல் - நிறைகோல் - தராசு: ஆகுபெயரா... தராசுத்தட்டையுணர்த்திநின்றது. துறத்தல் - கைவிடுதல். துன்னுத... நெருங்குதல். சூழ்ச்சி - தந்திரம்.

'என்னைச் சரணெனவாழ்கின்றானைத் துறந்தநாட் கின்... வந்து துன்னினான்சூழ்ச்சியாலே இறந்தநாளன்றோ வென்... றிருந்தநாளாவதென்றான்' என்றது, பாரி தன்னை 'வந்து துன்... னான்சூழ்ச்சியாலே இறந்த' வரலாற்றை நினைவூட்டுகின்ற... அவ்வரலாறு வருமாறு:—

மனம் மொழி மெய்களாற் செய்யவேண்டிய தருமங்களைச் செய்து தேகத்தினாலாய பயன் முற்றப்பெற்றார், 'மெய்ப்பயன் கொண்டார் கூளியார் சுமைபோடுதற்கு' என்றவாறு, தேகம் சாகுங் காலம்வந்தபோது சிறிதும் வருந்தார். அத்தகையோருள் ஒருவன் பாரி. அவன் பாண்டிநாட்டுச் சிற்றரசரில் ஒருவன்;

'கொடுக்கி லாதானைப் பாரி யேயென்று கூறி னுங்கொடுப் பாரிலை'

என்று சுந்தரமூர்த்திசுவாமிகள்தேவாரத்தில் புகழ்ந்துபாடப் பெற்றசிறப்புடைய தலைமைப் பெருங்கொடைவள்ளல். 'புலவர்கள் பலரும், உலகத்தைக் காப்பதற்குப் பாரி ஒருவனே உளன், வேறில்லையென்று கருதினார்போல, பாரி பாரி யென்று பாரியொருவனையே போற்றிப் புகழ்கின்றார்கள். உலகத்தைப் பாதுகாத்தற்குப் பாரியொருவன்தானோ இருக்கின்றான்? மழையும் உளது' என்ற அருமையினும் அருமையான கவித்துவம் அமைந்த,

பாரி பாரி யென்றுபல ஏத்தி
ஒருவற் புகழ்வர் செந்நாப் புலவர்:
பாரி ஒருவனு மல்லன்
மாரியும் உண்டீண் டுலகுபுரப் பதுவே

என்பது முதலிய கபிலர்பாடல்களும் வேறு சிறந்த சங்கப்புலவர் பலர் பாடல்களும் பெற்றவன். அவன், தம்மினும் கொடைமிகுதியினாற் சிறப்புற்றிருக்கின்றானென்ற பொறாமை முதலிய காரணங்களால் அவனைப் பகைத்துச் சேரசோழபாண்டியரான மூன்று பேரரசரும் ஒன்றுசேர்ந்து போர்செய்து வெல்லமுடியாது தோல்வியடைந்தனர். அப்போது, பாரியின் உயிர்நண்பனும் மேற்கூறிய புலவர்தலைவனுமான கபிலன்,

'எம்போல் இரப்பீரேல், இன்னுயிரும் ஈயும்வேள்'*

என்று தங்களுக்குக் கூறியதை அவ்வேந்தர் நினைவுகூர்ந்து ஒரு படைவீரனைப் பாணன்போல வேடம்பூணச்செய்து பாரியையே

* பாரிகாதை 392.

பரிசிலாகப் பெற்றுத் தம்மிடம் கொண்டுவரச்செய்து கொலைசெய் வித்தனர்.

' "துலைபுக்க பெரியோன்" என்பதில் அடங்கிய கதை:—சிபி சக்கரவர்த்தி அரசாளுகையில் அவனது மேன்மைக்குணத்தை பரிசோதிக்கும்பொருட்டு இந்திரன் பெரும்பருந்தாகவும், யம சிறு புறுவாகவும் வடிவமெடுத்து, அப்புறுவைப் பருந்து துரத் வர, அது சக்கரவர்த்தியைச் சரணமடைய, அன்னன் அதற் அபயமளிக்கப்பின்னே வந்த பருந்து, "என் இரையைக்கொடுத் விடு" என்று கேட்க, மன்னவன் "அடைக்கலம்புகுந்தவரை ஆத யாதுவிடுதல் அதிபாதகமாதலால், இதையன்றி எதைக்கேட்ட லும் கொடுப்பேன்" என்னப் பருந்து "இந்தப் புறுவின் எடையள தசையை உன் உடம்பினின்று அரிந்துகொடு" என்ன, வேந்த சம்மதித்து, உடனே தனது உடம்பிலுள்ள உறுப்புக்களையெ லாம் ஒவ்வொன்றாக அறுத்துவைத்தும் எடைகுறைந்தமைய தானே தராசுத்தட்டில் ஏறி எடையை நிறைக்க, உடனே, அ தேவர்கள் பிரத்தியட்சமாகிச் சக்கரவர்த்தியை மிகக்கொண்ட அவனுடம்பு முன்போல நிறைவுறும்படி வரமளித்துப்போயின என்பதாம்'. ஸ்ரீ. வை. மு. கோ.

பாடபேதம்: [1] நா ளிறந்த நாளாம், நா ளகன்ற நாளாம், நாட் க வந்து, நா ளன்று வந்து. [2] அன்றே. [3] வென்றி யிருந்த. [4] நா ளாய [5] என்பார்.

[தொடரும்.]

வெ. ப. சுப்பிரமணியமுதலிய

பழநி மாம்பழக் கவிச்சிங்க நாவலர் சரிதம்.

[௩ ச-ஆம் தோகுதியின் ௩ ௯௬-ஆம் பக்கத் தொடர்ச்சி.]

5. மரபும்—பிரிவும்

மாம்பழக்கவிராயர்மரபு "விசுவகன்மா" என்னும் தெய்வ ம்மியன்மரபு. இக்குலம் ஐவகைப்பிரிவினையுடையது. அவை நு, மயன், துவஷ்டா, சிற்பி, விசுவக்ஞன் என்பவர்களைத் தலைவர்க ாகவுடையன. இவ் வைந்துபிரிவுகளில் மநுகுலத்தார் இரும்புத் தாழிலையும், மயன்வழிவந்தோர் மரத்தொழிலையும், துவஷ்டாவின் ரபினர் தாம்பிரம் பித்தளை முதலிய உலோகத்தொழிலையும், சிற்பி ின்வழியினர் கற்கோத்துந்தொழிலையும், விசுவக்ஞன்மரபினர் தங்கம் வள்ளிகளைக்கொண்டு பணிகளமைக்குந்தொழிலையும் செய்வர். ிவ்வைவகைப்பிரிவினர்களுள் மநுகுலத்தார் இருக்குவேதத்தை ம் சானகரிஷிகோத்திரத்தையும் ஆசுவலாயநசூத்திரத்தையும், யன்மரபினர் யசுர்வேதத்தையும் சநாதநரிஷிகோத்திரத்தையும் ூபஸ்தம்பசூத்திரத்தையும், துவஷ்டாவின்வழியினர் சாமவேதத் தயும் அபுவனசரிஷிகோத்திரத்தையும் போதாயனசூத்திரத் தயும், சிற்பியின்வழிவந்தோர் அதர்வணவேதத்தையும் பிரத்நய ஷிகோத்திரத்தையும் த்ராஹ்யபானசூத்திரத்தையும், விசுவக் ஞன்மரபினர் பிரணவத்தையும் சுவர்ணரிஷிகோத்திரத்தையும் ாத்யாயநசூத்திரத்தையும் உடையவர்கள்.

மாம்பழக்கவிராயர் மேலேகாட்டிய ஐவகைமரபுகளுள் ான்காம்பிரிவாகிய சிற்பியின்மரபைச் சார்ந்தவர். இம்மரபினர், லைகளிலுள்ள கற்களைப்பிளந்து அவைகளைத் தம் சிற்றுளிகளைக் காண்டு அழகுபெறச் சித்திரித்துச் சிற்பாலங்காரமான திரு ாலயங்களையும், மண்டபங்கள் கோபுரங்களையும் சமைத்து எழில் பெறவிளங்கச்செய்யும் திறமையுடையோராவர்.

6. சமயம்.

கவிராயருடையமதம் 'சைவம்' என்ப. சைவம் என்னும் சொல்லின்பொருள், சிவசம்பந்தமுடையது; சிவனோடு தொடர் புடையது என்பதாம். 'சிவம்' என்பதற்கு மங்களம் (நன்மை) என்று பொருள். சமயம் மதம் நெறி என்பன ஒருபொருட்சொற் கள். கடவுளால் அல்லது கடவுளுடைய அருள்விளக்கம்பெற்ற ஆன்றோர்களால் சமயம் உண்டாக்கப்படுகின்றது. அச்சமயம்— சைவம், வைணவம், சமணம், புத்தம், கிறிஸ்துவம், மகம்மதீயம் கௌமாரம் எனப் பல்வேறுவகைப்படும்.

நன்மைக்கு வித்தாகவிளங்குவது, அன்பை வளர்த்து அரு நெறியிற் செலுத்துவது, இன்பநிலையுடையது: எனக் கருதப்படு வது சைவசமயம். இவர் சைவசமயமேற்கொண்டிருந்தும், சிவ பெருமானுக்குத் தனிப் பிரபந்தங்கள் இயற்றினாரில்லை. ஆயினும் தாம் பிரபுக்களிடத்துக் கவிபாடிப் பரிசுபெறச்செல்லுமிடங்களில் அங்குள்ள தமிழன்பர்கள்வேண்டுகோளின்படி ஆங்காங்குப்பாடிய 'கைலாசநாதர்சதகம்', 'சிங்காரரசமஞ்சரி', 'சந்திரவிலாசம்' முதலிய சிறுசிறு நூல்களில்மட்டும் சிவபெருமானுக்குத் துதிகவி பாடி யிருக்கின்றனர். அவை:—

"கழுமலர்ப் பொழிற்பழனிக் கயிலாச நாதர்பதங்
கருத்துள் வைப்பாம்"

"சேலநகர் தழைத்தோங்கத் திகழ்சுகவ னேசர்பொற்றாள்
சிந்தை சேர்ப்பாம்"

"ஏர்பூத்த கயிலாய நாதரிரு பாதமலர்
இறைஞ்சு வோமால்"

என்பன.

பழநிக்கு இறைவராகிய தண்டபாணி, அன்புகூர்ந்து கவி பாடும்புலமைமிகும்படி தமக்கு இளமையிலேயே அருள்பாலித்த தனால், இவர் அந்நாதனிடத்துப் பேரன்புகொண்டிருந்தனர். அதுகொண்டு, கவிராயர் தாம் பாடிய சிட்டுக்கவிகளின் பெரும் பகுதிகளில் அக்கடவுள்பெயர் பிறங்கும்படி பாடியிருக்கின்றனர். அவை:—

'தென்பழநி மலையில்வளர் தண்டாயு தக்குமார
தேசிகன் பதசேகரம்'

'சண்டப் பிரசண்டதண் டாயுத சடாட்சர
தயாநிதி யருட்பிரசாதம்'

'திடநடன மயிலில்வரு சிவசயில குமரகுரு
திவ்யகரு ணவிலாசம்'

'தடகரட கடவிகட சமரகஜ குமரகுரு
சரணமகு டாதிபத்தியம்'

'தடமகுட மகரகுண் டலதிட ஷடானன
தயாநிதி தியான புனிதம்'

'தடகிரண மணிமகுட சரவணபவானந்த
சண்முக னருட்பிரவாகம்'

'பூவார் கடம்பணி புயக்குமர குருபதாம்
புயசரோ தயதடாகம்'

'பார்கொண்ட நவகண்ட பகிரண்ட நிறைதண்ட
பாணிபொற் பததியானம்'

என்பன.

இங்ஙனம் கவிராயர் குமரக்கடவுளையே மிகுதியாகப் பாடினராயினும், ஐங்கரக்கடவுளுக்கும், அறுமுகத்திறைவர்க்கும் சிறு சிறுபிரபந்தங்களை இயற்ற மறந்தாரில்லை. கலைமகளுக்கும் வணக்கங்கூறியிருக்கின்றனர். அது, 'சரசுவதியம்மன் பஞ்சரத்தினம்' என்னும் பெயரது. அச் சிறுநூலிற் சைவமணம் மிகுதியாக வீசுகின்றது. அம் மணத்தை நுகர்வோர் பத்திவெள்ளத்திலாழ்ந்து பரவசமடையாதிரார். இக்காரணங்களால் இவர், சைவசமயத்தினரென்பது நன்கு அறியப்பட்டது.

---

7. அம்மைநோயால் அருங்கண்ணிழந்தது.

" ஒள்ளியர் தெள்ளிய ராயினும் ஊழ்வினை
பைய நுழைந்து விடும் "

மூத்தபுதல்வனைவிட இளையபுதல்வனாகிய மாம்பழப்பெயரினன் அழகும் அமைப்பும் கண்கவர்தோற்றமும் மிக்குவிளங்குவது

கண்ட முத்தையபத்தரும் அவர் மனைவியும் மிகமகிழ்ந்து அ
குழவியைத் தங்கள் உயிரினும் மேலாக மதித்துச் சீராட்டி
பாராட்டி வளர்த்துவந்தனர். அப்பாலன் கொட்டியும் தட்டியு
தவழ்ந்தும் பெற்றோரை மகிழ்வித்து மூன்றாண்டுநிறைவெய்தினன்

அப்பொழுது பழநித்தலத்திற் பருவமழை தவறியதா
கோடை மிகுதியான வெப்பத்தை யுண்டாக்கிற்று. அக் கொடி
வெப்பத்தைத் தாங்கமுடியாத பலர், வைசூரிகண்டு வாதைப்பட்
னர். அவர்களுள் மூன்றுவயதுடைய மாம்பழமும் ஒருவன்
அவன் அத் தொற்றுநோய்க்காற்றாது மிகவும் துன்புற்றனன்
எள்ளிட இடமின்றி மேனி முழுதும் கொப்புளம் எழுந்து கொடி
வேதனை தந்தது. பெற்றோர்கள் பிள்ளையின் நலிவுகண்டு, வெ
விடைப்பட்ட புழுப்போல் துடித்து வேதனைப்பட்டவராய்ச் செய்
தின்னதெனத் தோன்றாது மயங்கினர்.

ஊர்வழக்கத்தையொட்டியும், நடைமுறையைப் பின்பற்றியு
தாய்தந்தையர்கள் வைசூரிகண்ட குழந்தைக்குச் செய்யவேண்டி
சிகிச்சைகளையெல்லாம் சீராகச்செய்தனர்; ஆயினும், நோய்மட்டு
குறையாமல் மிகுதிப்பட்டுக்கொண்டேவந்தது. இறுதியாக
தீராதநோய்க்குத் தெய்வமேதுணையென்றும், அத்தெய்வத்தி
திருவடிகளில் அடைக்கலமாகவீழ்வதே மேலான உபாயமெ
றும், மக்கள்செய்த தீவினையை அரிதிற்போக்கி அவரை வினை
கட்டறுத்து விடுவிக்கும் ஆற்றல் ஞானசத்திமயனாகவிளங்கு
வெற்றிவேற்பெருமானுக்கே உரியதென்றும், அவனே தம
ஆன்மநாயகனும் வழிபடுதெய்வமும் மனக்கவலைதீர்க்கும் மருந்து
ஆவானென்றும், அவன் ஆலயங்கொண்டு வீற்றிருந்தருளு
திருமலைமீதுசென்று அவன் எதிரேநின்று முறையிட்டுக் குறை
தீர்க்கவேண்டுவதே மேலானசெய்கையென்றும், நோய்வாய்ப்ப
டுள்ள தம் புதல்வனையும் தம்முடன் கொண்டுசென்று அவ
சந்நிதியிற் கிடத்துவதென்றும் முத்தைய ஆசாரி முடிவுசெய்தன

அம்முடிவின்படி தாமதியாமல், வைசூரிக்கொப்புளத்தா
புண்பட்டிருந்த புதல்வனைத் தகுதியானதொரு சாதகத்தில் இள
வாழைக்குருத்தைப் பரப்பி, எண்ணை தடவி அதன்மீது பாலனை
பக்குவமாய்ப் படுக்கவைத்து மெல்லிய சல்லாத்துணிகொண்

மத்தென அணைத்து மெல்ல எடுத்துக்கொண்டு மலைமீது
சன்றனர். அப்பொழுது அவர்மனைவியும், நெருங்கிய உறவின
ம் அவருடன் வந்தனர். யாவரும் மலையேறி ஆலயத்தை வலம்
ந்து தீனசரண்யனாகவிளங்கும் தண்டபாணியைத் தரிசித்து
ணங்கினர். பிறகு பாலனைக் குமரக்கடவுள்திருமுன்பே கிடத்தி
ப்பாலன் உமது அடைக்கலம்; இவனை ஆதரிப்பது உமதுகடன்;
னசரண்யனே! உம்மையடைந்து உம்முடைய திருவடிகளே
ஞ்சமென்று உறுதியுடன் நம்பினோர்களிற் பயனடையாதவரை
ான் பார்த்திலேன்! அத்தகைய கருணைக்கடலாகிய தேவரீரை
ானும் அடுத்து அடைக்கலம் என்று முறையிட்டேன்; என்மீதும்
ருள்சுரந்து என் புதல்வன் நோய்நீங்கக் கடாட்சித்தருளல்
வண்டும் எனப் பிரார்த்தித்துத் தண்டபாணியின் எதிரே
த்தையபத்தர் ஓவியமென அசைவற்றுநின்றனர்.

முத்தையபத்தர் மெய்யன்பால் உள்ளமுருகித் தம்மையே கதி
யன்று நம்பிச் சரண்புகுந்து தம்முடையமைந்தனைக் காத்தருள
வண்டுமென்று பிரார்த்திக்கும் உருக்கமும், பிற்காலத்தில் தமி
கத்தில் ஆசுகவிச்சிங்கமாய்ப் புலவர்திலகமாய்க் கீர்த்திக்கோர்
லயமாய்ச் சிறப்புடன் விளங்கவிருக்கும் இளையமாம்பழத்தின்
னநிலையும் பிரணவப்பொருளைப் பெருமானுக்கு உணர்த்திய சாமி
தன்திருவுளத்தைக் கனியச்செய்தன. அக்கனிவால் கார்த்தி
கயன், முத்தையபத்தர்பால் அருள்சுரந்து, அசரீரியாக அவர்
சவிகட்குமட்டும் கேட்கும்படி, 'முத்தையா! நீ கவலையை விடு;
மது உத்திரவுப்படி நட; உனது பிரார்த்தனைக்கு மகிழ்ந்தோம்;
ம்முன்னர்க் கிடத்தியிருக்கும் உன்புதல்வனை நின் இல்லத்திற்கு
டுத்துச்செல்க. பாலன் பிணிநீங்குவான்.' என்று மொழிந்தனன்.

தேனினும் இனிய அச்சொல்லமுதம் தம் செவியிற்பட்டதும்
த்தையபத்தர் திடுக்கிட்டுவிழித்து, இது கனவோ! நனவோ!
ன ஐயுற்றுப் பின்னர் அயில்வேற்காத்தன் அன்பர்கட்கு இரங்
ச் செய்யும் ஆருள் இதுவென்று தெளிவடைந்து, தம் பாலனைக்
ர்ந்து கவனித்தனர். அப்பொழுது அப்பாலன், கிடத்தியபோ
ருந்த கேவலநிலையின்றி நோயின்கொடுமை தணிந்தநிலையிற்
ணப்பட்டான். அவ்வதிசயத்தால் அங்கிருந்த யாவரும் வியந்து
கிழ்ந்தனர். அனைவருப், ஒருமுகமாய்க் 'கலியுகவரதன் கண்கண்ட

தெய்வம் என்று பல்லோராலும் பன்னிப்பன்னிப் பலமுறையுரை கக் கேட்டுளோம். இன்றுதான் மெய்யென்பதை நேராகக் கண் டோம்' என்று வாயாரக்கூறிக் கலியுகவரதன் கருணைச்செயலையுப் அக்கடவுள் தீனர்க்கிரங்கும் நலத்தையும் நெஞ்சாரத்துதித் அப்பெருமானைப் பணிந்து ஆலயத்தினின்றும் நீங்கி மலைவிட டிறங்கி வீடுசேர்ந்து அன்றிரவைக் கழித்தனர்.

பொழுதுபுலர்ந்ததும் புதல்வனைப் பெற்றோர்களும், மற்றோர் ளும் ஊன்றிக் கவனித்தனர். குழந்தையின் உடல்முழுதும் பர யிருந்த வைசூரிக்கொப்புளம் முதனாளினும் அன்று வெகுவாக குறைந்திருப்பதற்கு மகிழ்ந்தனர்; 'இனிப் பாலனுக்கு மரணப மில்லை' என்று தைரியங்கொண்டனர்.

அசரீரிமொழிந்தபடியே குழந்தைக்கு வைசூரி நாளுள படிப்படியாகக் குறைந்து சிலநாளைக்குள் முழுதும் தீர்ந்தது. இ னிடையே அதிசயம் ஒன்று நிகழ்ந்தது. அது—'முத்தையபத் தம் பிள்ளையை மலைமீதுள்ள தண்டபாணி ஆலயத்திற்கு எடுத்து சென்று திரும்பியநாள்முதல், பிள்ளை இளையமாம்பழம், புதிதா வாய்திறந்து முருகா! முருகா!! என்று இனிமையாகத் தனது ம லைச் சொல்லால் மொழியத்தொடங்கியது என்பது. அந்நன்மொ நல்லோர்கேண்மைபோல் நாளும் பெருகிக்கொண்டேவந்த அவ்விளம்பாலன் அச் சின்னஞ்சிறுபருவத்தில் முருகக்கட ளிடத்து அன்புமிக்கு அவன் திருப்பெயரை இனிமையாகக்கூ வதுகேட்டு யாவரும் வியந்தனர். தாய்தந்தையர் தம் புதல்வன அருமைமொழிகேட்டு ஆகம்பூரித்தனர்; ஆயினும், வைசூரிநீங்கி மறுநாளே மாம்பழத்தின்முகத்திற்கு அணிகலனாகவிளங்கி அருங்கண்களின் ஒளி குன்றிப் பார்வை கெட்டது. அதுகண் பெற்றோரும் மற்றோரும் பெரிதும் புலம்பிக் கண்ணீர்வார்த்தனர்

முத்தையபத்தர் தம்முள், 'வடிவேற்கரத்தன், தம்மை ய வழிபடினும், அவர்தம் வல்வினையைப் போக்கி அருள்பாலிக்கு கருணாசாகரனவன். அத்தகைய அருண்மூர்த்தி அசரீரியாக கருணைபாலித்தும், இன்னும் குறைதீர்ந்தபாடில்லை. முற்பவத்தி செய்தவினையால் பாலன் கண்ணிழந்தான்போலும்; விதியை யா வெல்லும் நீர்மையர்? எய்ப்பினில்வைப்பாகிய இறைவன் அ முகப்பெருமான் சந்நிதியடைந்து மதலைக்குற்ற கதியைக் கூ

முறையிட்டழுது பரிகாரம்பெறுவேன்' என்று முடிவுசெய்து கொண்டு, முன்போலவே தம் சுற்றத்தார் சூழ மலைமீதுசென்று, கொற்றமிகும் வெற்றிவேற்கரத்தன் ஆலயமடைந்து மும்முறை வலம்வந்து விசேட அபிடேக அலங்காரங்கள் செய்வித்து ஆண்ட வன் எதிரே கூப்பியகரத்தராய்நின்று, 'கோதிலாக்குன்றமே! அன்று என் அருமதலைக்குற்ற வைசூரிநீங்கும்படி அருள்பாலித் ததுபோலவே அவனுக்கு மறைந்த கண்ணொளி மீண்டும் பிரகாசிக் கும்படி அநுக்கிரகிக்கவேண்டும்' என்று பிரார்த்தித்தனர். ஆயி னும் முன்போல் அசரீரி தோன்றுமல் ஆலயக்குருக்கள்மட்டும், ஆண்டவனுக்கு அர்த்தசாமகாலத்திற்செய்த பாலபிடேக தீர்த் தத்தையும், திருநீற்றுப்பிரசாதத்தையும் தந்து வீடு செல்லுமாறு பணித்தனர். அவ்வருட்பிரசாதங்களை முத்தையபத்தர் வணங்கிப் பெற்றுத் தம்முடன்வந்தாரோடு மலைவிட்டிறங்கி மனைசேர்ந்து, மதலையின் நெற்றியிலும் சிரத்திலும் திருநீறுபூசித் தீர்த்தத்தை வாயிலும் கண்களிலும் வார்த்தனர்.

அன்றிரவு முத்தையபத்தர்கனவில் பழநிக்கிறைவர், நரை யெழுத்த முதுமைக்கோலத்தில் தண்டூன்றியகையுடன் தோன்றி 'அன்பனே! உன் புதல்வன் இருகண்களையும் இழந்ததற்குக் கவ லைப்படவேண்டாம். அவ்வாறுநேர்ந்தது அவனுடைய பழவினையின் விளைவு. அதை அவன் அநுபவித்தேயாகவேண்டும். அவன் தன் ஊனக்கண்களை இழந்திருப்பினும், ஞானக்கண் சுடரொளியுடன் பிரகாசிக்கும்; அந்நலத்தால் அவன் நுண்ணுணர்வுடன் நூல்பல கற்றுத் தேர்வன்; நெஞ்சிலும் நாவிலும் செந்தமிழறிவு ஊற் றெடுக்கும்; கடல்மடை திறந்தாற்போலக் கவிபாடும் ஆற்றல் உண் டாகும்; கண்டார் எதிர்கொண்டழைப்பர்; காணுதார் காணவிழை வர்; பெருமையுண்டாம்; கீர்த்தி சிறக்கும்; மாம்பழத்திற்கு ஞா னாசிரியரும் நாமே.' என்று கூறி மின்னென மறைந்தனர்.

முத்தையபத்தர் திடுக்கிட்டுவிழித்துத் தம்பால் முருகக் கடவுள் அருள்சுரந்து கனவில் தம்முன்தோன்றிக் காட்சியளித்துச் சில மொழிந்து கதுமென மறைந்ததற்கு அதிசயம் மிக்குற்றுப் 'பிள்ளையின் ஊழ் அதுவாயின், நான் செய்யவல்லது யாதுளது?' என்று தம்முள் தாமே கூறிச் சமாதானமடைந்து அதுமுதல் புதல்வனைவளர்ப்பதிற் கண்ணுங் கருத்துமாயிருந்துவந்தனர்.

---

8. கல்விகற்றதும்—வளர்ந்துபெருகியதும்.

"தொட்டனைத் தூறு மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறு மறிவு" (திருக்குறள்)

முத்தையபத்தர் நாள்தோறும் தம்முடைய நித்தியக்கட களை நிறைவேற்றியபின், பூவார்கடம்பனைப் புந்தியில் நினைந் வந்தித்துச் சிந்தைக்கினிய செவிக்கினிய வாய்க்கினிய வந்தவி(வினைக்கு மாமருந்துபோல்வனவாகிய தேவாரங்களையும் திரு புகழ்ப்பாடல்களையும் மணிவாசகமெனும் திருவாசகத்தையு எழுத்துப்பிழை சொற்பிழைகளின்றி வாய்மணக்கப் பாடி நெ(சுருகத் தோத்திரித்து மகிழ்வர்; இவர் தாம் பாடும் கடவு வாழ்த்துக்களைத் தம் இளம்புதல்வன் மாம்பழத்தையும் அ கிருத்திப் பாடப்பயிற்றிவந்தனர். அவ்விளம்பாலன், ஞானதேசி ளுகிய தண்டபாணியின் கிருபாநோக்கம் பெற்றிருந்ததனுல், அ விளவயதிலேயே அத்துதிகவிகளைப் பயிற்றுவித்தபடியே இனிமை யாகப் பாடிவந்தனன். இங்ஙனம் பாடும் பழக்கமிகுதியால், மா பழத்திற்கு நாப்பழக்கம் அதிகரித்தது. 'சேந்தமிழும் நாப்பழக்க என்பது மூதுரையன்றே!

சிறுவன் இன்குரலில் இன்னிசையெழப்பாடும் அதிசய கண்டு ஈன்றோர்கள் இதயங்களித்தனர். கந்தவேள் தம் கனவி தோன்றி 'மாம்பழம் கவிபாடுவதில் ஒப்புயர்வின்றி உயர்ந் விளங்குவன்; அவனுக்கு ஞாநாசிரியரும் நாமே' எனக் கூறிய முழுதும் உண்மையென்பது அப்பொழுதுதான் முத்தையபத் ருக்கு நெஞ்சில் உறைத்தது; நம்பிக்கைகொண்டனர். சீர்கா ஞானசம்பந்தப்பிள்ளையார் மூன்றாண்டிலேயே தேவாரப்பாடல் ளைப் பண்ணேசைகுன்றுமற் பாடினரென்ற செய்தி கேட்டுளே மன்றே! இத்தெய்வப் பிரசாதம் அப்பிள்ளையார் முன்செய்த வினைப்பயனுல் அவருக்கு வாய்த்தது. இத்திருவருட்பிரசாத எல்லாச்சிறுவர்கட்கும் வாய்ப்பதில்லை.

இப் பெறற்கரும்பேறுபெற்றருள் பழநி மாம்பழப்பாலனு ஒருவன். அவன் நான்கு ஆண்டு கடந்து ஐந்தாம் ஆண்டடை னன். அவன் குழந்தைப்பருவத்திலேயே வைசூரியினுல் க

ிழந்தமையால் தானுகவே பள்ளிக்குச்சென்று கற்பதற்கு இய
தவனுயினன். ஆதலால் முத்தையபத்தர் தாமே தம்புதல்வ
க்கு ஆசிரியனுகவிருந்து முருகன்திருவடியைத் துணையாகக்
ாண்டு நல்லதொருநாளில் போதிக்கத்தொடங்கினர்.

ஆசிரியராய் அமர்ந்த தந்தை, தம் புதல்வனுகிய மாணவனை
்வொரு தமிழெழுத்தையும் முறைப்படி உச்சரிக்கச்செய்து,
வைகளின் வரிவடிவை அவன் முதுகில் தம் விரலால் எழுதிக்
ட்டினர். ஓதாமலே உணருமாற்றலும், முற்பிறப்பிற் கற்ற கல்வி
சனையும், தமிழ்க்கடவுளான தண்டபாணியின் தண்ணருட்
ர்வையும் வாய்க்கப்பெற்ற அச்சிறுவன், இரண்டொருநாளில்,
பிரெழுத்துப் பன்னிரண்டும், மெய்யெழுத்துப் பதினெட்டும்
கிய முப்பது எழுத்துக்களையும் கற்றுக்கொண்டான். பிறகு
வன், எழுத்துக்களின் ஒலிவடிவை வாயாற் கூறிக்கொண்டு வரி
டிவுகளைக் கையாற் கற்பலகையில் எழுதிக்காட்டினன். அங்ங
ம் கற்பலகையில் எழுதிய எழுத்துக்கள் கோணலின்றியும், வரி
றழாமலும், முத்துக்கோத்ததுபோலவும் அழகாயிருந்தன. அது
ண்ட முத்தையபத்தர் தம் அருமைப்புதல்வன் அறிவின் திறத்
ற்கு அதிசயித்தனர்.

'"விளையும்பயிர் முளையிலே தெரியும்" என்பர் ஆன்ருேர். அவ்
ண்மையை நாம் இன்று இவனிடத்து நேரிற் கண்டோம். இந்
ன்மகன், பிற்காலத்திற் கல்வியில் வல்லானுகவும், கவிபாடுவதிற்
றந்தவனுகவும் விளங்குவன். இதில் எட்டுணையும் ஐயமில்லை'
பன்று மேலும் முத்தையபத்தர் தம்முள் உறுதிகொண்டார்.

"தம்மிற்றம் மக்கள் அறிவுடைமை மாநிலத்து
மன்னுயிர்க் கெல்லாம் இனிது"

ன்ற தேவர்திருவாக்குத் தம்மளவில் உண்மையானதுகண்டு
த்தையபத்தர் தம்முள்ளே மகிழ்ச்சிகொண்டார்.

அறிவாலும், ஒழுக்கத்தாலும் சிறந்த மகனுக்குத் தந்தை
சய்யவேண்டிய கடமை, அறிஞர்கூடியுள்ள அரும்பெருஞ்சபையில்
ன்மகன், 'கல்வியில் மிக்கான்; அறிவில் மேம்பட்டான்; வாசாம
காசரமாய்வசனிப்பதில் வல்லான்; கவிபாடுவதில் இணையற்
ன்; அவையின் முன்னணியில் இருத்தற்குத்தக்கான்;' என்று

யாவரும் சிறப்பித்துக்கூறும்படி அவனைக் கற்கச்செய்வதென்பது. அதனை முத்தையபத்தர் நன்குணர்ந்து அம்முயற்சியிற் பெரிதும் ஈடுபட்டவராய்த் தம் புதல்வனுடைய நுண்ணறிவின் அதிதீவிர பக்குவத்திற்கேற்றபடி கல்வியை நன்றாகப் புகட்டவல்ல தமி ழாசிரியர் ஒருவரைத் தேடிக்கொணர்ந்து அவ்வாசிரியரிடத்து இளையமாம்பழத்தை ஒப்புவித்துக் கல்விபுகட்டும்படிசெய்தனர். அவ்வாசிரியர்பெயர் "மாரிமுத்துக்கவிராயர்" என்ப. இவர் அக் காலத்திற் பழநியிற் சிறந்தபுலவராக விளங்கியிருந்தனர். கவி ராயரும் சிறுவனுடைய தகுதியறிந்து தமிழை முறையாகப் போதித்துவந்தனர்.

மாம்பழமும் ஆசிரியர் போதிக்கும் அருந்தமிழைக் கருத் தூன்றிக் கற்றுவந்தனன்; சித்திரப்பாவையைப்போல் அசைவற் றிருந்து, மனத்தை அலையவிடாமலடக்கிச் செவி வாயாக நெஞ்சு களனாகக் கேட்டவைகளைக் கேட்டவாறே உள்ளத்தமைத்ததனால் ஒன்பது ஆண்டுகளுக்குள் மாம்பழம், அந்தாதி மாலை உலா தூது பிள்ளைத்தமிழ் கோவை முதலிய சிற்றிலக்கியங்களையும் பாரகாவியங்களையும் இலக்கணநூல்களையும் ஐயந்திரிபற முறை யாகக் கற்றுத்தேர்ந்தனன்; யாப்பிலக்கணவிதியுணர்ந்து கவிபாடும் திறமையும் பெற்றனன்; பிறகு வேதாந்த சித்தாந்த சாத்திரங்க ளையும் அவற்றில் தேர்ந்த ஆசிரியர்களிடம் கற்றுக்கொண்டான்; மேலும் தருக்கம் சோதிடம் சங்கீதம் முதலிய கலைகளிலும் பயிற்சி பெற்றான். சுருங்கக்கூறின், மாம்பழம் ஆசிரியர்பால் கற்கவேண் டியநூல்களனைத்தையும் விதிவழுவின்றி விளக்கமுறக் கற்றுக் கவிபாடுவதிலும் பிரசங்கஞ்செய்வதிலும் தனக்கு ஒப்பாரும் மிக் காருமின்றி விளங்கினன்.

ஆசிரியர் தன்பால் அருள்சுரந்துபுகட்டிய கலைகளனைத் தையும்,

'ஏடாயி ரங்கோடி யெழுதாது தன்மனத் தெழுதிப் படித்த விரகன்'

என்னும்படி தன்மனம் என்னும் ஏட்டில் பதியவைத்ததே, மாம் பழம் புலமையில் உயர்வதற்கு ஏதுவாயிற்று. இங்ஙனம் இவனுக் கமைந்த ஆற்றலைக் கண்ட ஆசிரியர் அதிசயித்து மகிழ்ந்தனர். இச்செயல்காரணமாக இவனுக்குக் கல்விபுகட்டவந்த ஆசிரியர் பலராயினர்.

தமிழ்மொழிப்புலமை இவ்வாறாக, மாம்பழப்புலவர், வட மொழியிலும் தாம் 'வல்லார்' எனப் பெயர்பெறவேண்டுமென்ற பெருவிருப்பத்தால், அம்மொழிவல்லாரிடம் வடமொழியையும் இயன்றவளவு பயின்றனர். இவருக்கமைந்த வடமொழியறிவு, இவருடைய சீட்டுக்கவிகளிலும் பிற பிரபந்தங்களிலும், 'கிரண ந்த்ரசடாமகுடம்' 'திரியம்பகாம்போஜம்', 'ஜயகும்பகேம்பீர' 'திவ்ய ஞ்சரவதனம்', 'பரிமளசதுர்ப்புஜம்', 'லம்போதரப்பிரவாகம்', 'உசித வளாம்பரானந்தம்', 'சீததளவனசபாதம்', 'ஜீவபரிபாலனம்', 'குணல ரபாகரன்', 'தேவகணவிநுத', 'படிகரத்நாபரண'—எனவரும் வட மொழிச்சொற்றொடர்களால் அறியப்படும்.

முத்தையபத்தர் தம்மகன்பொருட்டுத் தம் இல்லத்தில் மொழியறிவுமிக்க புலவர்கள் ஒன்றுகூடவும், அவர்கள் பல்வகைக் விகளைப் பாடவும், சொற்பொழிவுநிகழ்த்தவும், தமிழ்சம்பந்த ான சம்பாஷணைகளைப் புரியவும் போதியவசதிசெய்திருந்தனர். ப்புலவர்கள் கூட்டுறவால் இளங்கவியாகிய மாம்பழத்திற்கு அறி ப்பெருக்கமும், ஆன்றபுலமையும், சொற்சாதுரியமும், பேச்சு ன்மையும், எதனையும் நுனித்தறியுந்தன்மையும் மிகுதிப்பட்டன; ற்றலினும் கேட்டல் பன்மடங்கு உயர்ந்ததென்பது அறிஞர் ணிபன்றோ.

இப்பெற்றியால், மாம்பழத்தைச் சிலர் ஞானகாந்தம் எனப் பெயரிட்டு அழைத்தனர்.

[தொடரும்.]

சி. கு. நாராயணசாமிமுதலியார்.

பாஞ்சராத்திரம்.

[௩௪-ஆம் தொகுதியின் ௩௮௬-ஆம் பக்கத் தொடர்ச்சி.]

அபிமன்யு:—இங்கேயிருக்கும் பெரியோர்கள் என் தந்தையர்களா? ஆதலால்,

ந ருஷ்யந்தி மயா க்ஷிப்தா ஹஸந்தஶ்ச க்ஷிபந்தி மாம்।
திஷ்ட்யா கோக்ரஹணம் ஸ்வந்தம் பிதரோ யேந தர்ஶிதா:॥

என்னால் நிந்திக்கப்பட்டாலும், அவர்கள் சினங்கொள்ளவில்லை; அவர்கள் என்னைப்பழித்தாலும் சிரித்துக்கொண்டே பழிக்கிறார்கள். நிரைகவர்ந்தது நல்லமுடிவுள்ளதாயிற்று; சந்தோஷம்! தந்தையர்கள் காணப்பெற்றார்கள். (பீமசேநனைநோக்கி)

அஜ்ஞாநாத்தாத யத்பூர்வம் யத்பவாந் நாபிவாதித:।
தஸ்ய புத்ராபராதஸ்ய ப்ரஸாதம் கர்துமர்ஹஸி॥

உண்மைதெரியாததால் நான் தங்களை வணங்கவில்லை; அறியாமையால் புத்திரன்செய்த பிழையைப் பொறுத்தருளவேண்டும்.

பீமசேநன்:—வா, வா. பிள்ளாய்! தந்தைக்குச் சமமான பராக்கிரமமுள்ளவனாக இருப்பாயாக.

அபிமன்யு:—அநுக்கிரகிக்கப்பெற்றேன்.

பீமசேநன்:—பிள்ளாய்! தந்தையை வணங்குவாயாக.

அபிமன்யு:—ஓ! அப்பா! வணங்குகிறேன்.

அர்ஜுனன்:—வா, வா. குழந்தாய்! (ஆலிங்கனஞ்செய்து)

அயம் ஸ ஹ்ருதயாஹ்லாதீ புத்ரகாத்ரஸமாகம:।
யஸ்த்ரயோதஶவர்ஷாந்தே ப்ராப்த: புநராகத:॥

என்மனதைக் குளிரச்செய்வதான ஆலிங்கனமானது பதின்மூன்றுவருஷங்களாகக் கிட்டாது, மறுபடியும் இப்பொழுது கிடைத்தது. பிள்ளாய்! விராடேசுவரரை வணங்குவாயாக.

அபிமன்யு:—(விராடனைநோக்கி) வணங்குகிறேன்.

3

அரசன்:—குழந்தாய்! வா! வா!

𑌯𑍌𑌧𑌿𑌷𑍍𑌠𑌿𑌰𑌂 𑌧𑍈𑌰𑍍𑌯𑌮𑌵𑌾𑌪𑍍𑌨𑍁𑌹𑌿 𑌤𑍍𑌵𑌂
𑌭𑍈𑌮𑌂 𑌬𑌲𑌂 𑌨𑍈𑌪𑍁𑌣𑌮𑌰𑍍𑌜𑍁𑌨𑌸𑍍𑌯।
𑌮𑌾𑌦𑍍𑌰𑍀𑌜𑌯𑍋𑌃 𑌕𑌾𑌨𑍍𑌤𑌿𑌮𑌥𑌾𑌭𑌿𑌰𑍂𑌪𑍍𑌯𑌂
𑌕𑍀𑌰𑍍𑌤𑌿𑌂 𑌚 𑌕𑍃𑌷𑍍𑌣𑌸𑍍𑌯 𑌜𑌗𑌤𑍍𑌪𑍍𑌰𑌿𑌯𑌸𑍍𑌯॥

யுதிஷ்டிரரைப்போல் தைரியத்தையும், பீமசேநனைப்போல் வலிமையையும், அர்ஜுனனைப்போல் திறமையையும், நகுலசகதேவர்களைப்போல் அழகு அறிவு ஆற்றல்களையும், உலகத்தாரால் விரும்பப்படுகிறவரான கிருஷ்ணனைப்போல் புகழையும் நீ பெறுவாயாக.

(தனக்குள்) அர்ஜுனன் உத்தரையுடன் நெருங்கிப் பழகியிருக்கிறான் என்பது எனக்கு வருத்தத்தைக்கொடுக்கிறது; நான் என்னசெய்வேன்? இருக்கட்டும்; அதற்கும் ஒரு பரிகாரம் செய்வேன். யாரடா அங்கே?

வேலையாள்:—(புகுந்து) மகாராஜா வெற்றிபெறுக.

அரசன்:—தண்ணீர்; தண்ணீர்.

வேலையாள்:—மகாராஜா உத்தரவுப்படி. (வெளியேசென்று மறுபடி புகுந்து) இதோ தண்ணீர்.

அரசன்:—(நீரைக்கையிலெடுத்து) அர்ஜுன! பசுநிரைகளைமீட்டு வெற்றியடைந்ததற்கு வெகுமதியாக உத்தரையைப் பெற்றுக்கொள்ளவேண்டும்.

பகவான்:—என்தலை இறங்கியது.

அர்ஜுனன்:-(தனக்குள்) என் நடையைப்பற்றிச் சந்தேகிக்கிறார்போலும். (வெளிப்படையாக, விராடனைநோக்கி) ஓ! அரசரே! இந்த அந்தப்புரமகளிரெல்லாரும் என்னால் தாயைப்போல் பூசிக்கப்பெற்றார்கள்; தங்களால் கொடுக்கப்பட்ட உத்தரையை என் புத்திரனுக்காகப் பெற்றுக்கொள்ளுகிறேன்.

யுதிஷ்டிரர்:—என் சிரம் மறுபடியும் மேலே நிமிர்ந்தது.

அரசன்:—𑌉𑌢𑌾𑌨𑍀𑌂 𑌪𑌾𑌣𑍍𑌡𑍁𑌪𑍁𑌤𑍍𑌰𑌾𑌣𑌾𑌂
𑌚𑌾𑌸𑍀𑌦𑍍𑌦𑍂𑌷𑌾 𑌵𑍍𑌯𑌵𑌸𑍍𑌥𑌿𑌤𑌃।

ஊ஁தீவூ஁ர நிவாஸஸ்ய
ஸத்ருஸீம் க்ருதவாந் க்ரியாம் ॥

யுத்தத்திற் சூரர்களென்றும், நன்னடக்கையுள்ளவர்களென்றும் ஈடுபட்டு அந்தப்புரத்தில்வசித்ததற்கு ஏற்றதான செய்கையை நான் செய்தேன். இன்றைக்கு நன்னாள். இன்றைக்கே அவனுக்கு விவாகம் நடக்கட்டும்.

யுதிஷ்டிரர்:—இருக்கட்டும்; பிதாமகரிடம் உத்தரனை அனுப்புவோம்.

அரசன்:—தங்களுடைய விருப்பத்தின்படி: தர்மராஜ! பீமசேன! அர்ஜுன! இந்த மகிழ்ச்சியுடன் உள்ளே செல்வோம்.

எல்லோரும்:—நல்லது.

(எல்லோரும் செல்லுதல்.)

இரண்டாம் அங்கம் முற்றிற்று.

மூன்றுவது அங்கம்

தேர்ப்பாகன்:—(அரங்கம் நுழைந்து) ஓ! ஓ! ஆசாரியரை முன்னிட்டுக்கொண்டிருக்கிற க்ஷத்திரியர்களிடம் தெரிவிக்கப்படட்டும், தெரிவிக்கப்படட்டும்.

ஸ்வாஸ்ய நாராயணஸ்ய ஜம் ஸயம்
விஸ்ருஜ்ய ணஷ்டாந் வரிஹ்ருய வாண்டவாந் ।
யதந்தி ஸஹாயைஃ ஶத்ருஹி நஃ ரக்ஷிதா
ஹ்ருதோ Zபிநந்யுஃ க்ரியதாம் வ்யவஸ்தா ॥

ஸ்ரீகிருஷ்ணனுடைய சக்கராயுதத்தால் உண்டாகும் பயத்தையும் விட்டு, வெகுகாலமாக அறியப்படாதிருக்கிறவர்களான பாண்டவர்களையும் பொருட்படுத்தாமல், எவனாலேயோ அபிமன்யு பிடிக்கப்பட்டானே! கைகளில் வில்லையுடையவர்களான குருவீரர்கள் அவனைக் காக்கவில்லையே! வெட்கமில்லையா?

(பீஷ்மரும் துரோணரும் அரங்கில் நுழைதல்)

துரோணர்:—ஸூதனே! சொல்லுவாயாக, சொல்லுவாயாக,

ரணவடீாவ நீதঃ கெந ஒ ஶிஷ்யவாதூঃ
க ஊஹ ஐஐ ஶரொஷெதெஷவணெ தயெஷாஜாகாஸிঃ।
யைய வாராஷஸாரம் யாவஷஸ்ரும் ஐலும் வா
ஐஷவத ஐவ ஷ௩ிதாம் ஷஹுஸம்ஷெ௩ஷயாஜி॥

போரில் தேர்ச்சிபெற்றவனும், என்னுடைய சிஷ்யனுக்குப் புதல்வனுயுமிருக்கிற அபிமன்யுவை எவன் கொண்டுபோனுன்? தெய்வத்தன்மையுள்ள அஸ்திரங்களையுடைய என்னுடன் போர் புரிய எவன் விரும்புகிருன்? அவனைக்கொண்டுபோனவனுடைய வலிமை, ஆயுதம், உதவியாட்கள்: இவ்வளவையும் எனக்கு விரித்துரைப்பாயாக; நான் அவனிடம் ஆற்றல்மிக்க தூதர்களைப் போன்ற என் அஸ்திரங்களை முழுவலிமையுடன் ஏவுகிறேன்.

பீஷ்மர்:—சொல். சொல். தேர்ப்பாகனே! சொல்லுவாயாக.

ஊரூாவயாநெஷ நஹிஜகுஷொஷ
ஷாராணுஹாவெந விஜும்வஸிநঃ।
கெஒநெஷ ஹஷிரஹணொஷுதெந
யஷியெ ஷுயாதெ கலுஹொரஹுஹீதঃ॥

எதிரிகளால் அடிபட்டுத் தேர்கள் முறிந்து மற்றவர்கள் ஓடும் போதும் தான் ஓடாதவனும் யௌவனப்பருவமுடையவனுயிருப்ப தால் சற்றுத் தாமதித்தவனும் ஆனைக்குட்டிபோன்றவனுமான அபிமந்யுவை —(யானைபிடிக்கவந்தவன் அண்ணல்யானையகன்றபின் ஆனைக்கன்றைப் பிடித்ததுபோல)ப் பிடித்துவிட்டானே!

[துர்யோதனனும் சகுனியும் அரங்கமேறுதல்.]

துர்யோதனன்:—ஸூத! சொல்; சொல். அபிமன்யுவை எவன் கொண்டுபோனுன்? நானே அவனை விடுவிக்கிறேன்; ஏனெனில்,

ஐஐஹி விதுஷிரஸு ஷுஷூதா ஜதூதிஷெஷ
ஷுஷிஹ ஐயிதா ஷொஷெஷா வக்ஷஹீঃ வாதநீயঃ।
கயெ வ ஐஐ ஸ வாதூঃ வாணவாநாம் தா வஜூாக
ஸதி வ காஜவிரொயெ நாவராயுஷி வாஜாঃ॥

எனக்கு அவனுடைய தந்தைமார்களுடன் ஞாதிப்பகை யிருப்பது உண்மையே. ஆதலால், இவன் பிடிபட்டான் என்ற

அபவாதத்தை ஜனங்கள் என்மீதே கூறுவார்கள்; மேலும், இவன் முதலில் எனக்குத்தான் பிள்ளை; பிறகே பாண்டவர்களுக்கு; ஞாதிப் பகை இருக்குமானாலும் குழந்தைகள்பேரில் குற்றம் ஏது?

கர்ணன்:—உமக்குத்தகுந்தனவும் நேசம்மிகுந்தனவுமா வார்த்தைகளே உம்மால் இயம்பப்பெற்றன.

ஶ்ரோதாவஸ் ஸ்வஜநஸ்யாத்ர வாஸ்ஹாவாஸ்
வ்யாவஹ: ஸஶீஶ்ரெ தவ ப்ரியாய்ஜு।
ஸுஹாஹி நவ்வபிரக்ஷிதாZஹிஶந்ய
ம்ருஹ்யஹாம் யநு ரவநீய வஜூரநி॥

அவனைச்சேர்ந்தவர்களுக்கஞ்சி அவனை நாம் காக்கவேண் மென்பதும் சரியான காரணமில்லை; அவன் சிறுவனாயிருப்பதா அவனை நாம் எவ்விதத்திலும் காப்பாற்றியிருக்கவேண்டுமென் தும் காரணமில்லை; உமக்கு நன்மைசெய்வதற்காகவே அவ போரின் முன்னணியிலிருந்து போர்செய்தானே! அப்படிப்பட் அபிமன்யுவைச் சூரர்களான நாம் காக்கவில்லையே; இனி நமக் விற்களால் ஒரு காரியமுமில்லை; அவற்றை எறிந்துவிட்டு, மரவு களையுடுத்துத் தவஞ்செய்வதற்காகக் கானகம்புகுதலே உசி மாகும்.

சகுனி:—ஸுபத்திரையின்புத்திரனைக் காப்பாற்றுகிறவர்க பலர் உண்டு; ஆகையால் அவன் எவ்வாறேனும் விடுவிக்கப்பெ வான். ஏனெனில்,

ஶௌவெஜநவாத்ரு ஜ த்யவமெதா ராஜா விராட: ஸ்வயம்
ஸ்யாதா வாத்ய ரணாஜிராதவஜீதம் ஶௌவெஸ ஸ ஷாஶொஷர
கொ்ாயொஸ்ஹ தஹஸாஸ் ப்ருஶம்வஶயநாதீதெந ஶௌவெய்தவ
ஹீஶவெஸ ந ஜிஹாநயெ ஷஹாநு ஹவதாஸ்வநஜிதா

போரில் தோல்வியடைந்தவனான அவனை விராடஅரசவே அர்ஜுனபுத்திரனெனத் தெரிந்து விடுவிக்கக்கூடும்; அல்ல கோபம்வந்தால், கலப்பையை எறிகிறவரான பலராமரிடங்கொண் பயத்தால் அவனை விட்டுவிடலாம்; அன்றி, கிருஷ்ணனை மனதி எண்ணி அவனை விட்டுவிடவுங்கூடும். வலிமிக்கவர்களானபகைவ களைவென்று பீமனே அவனை விடுவித்துக்கொணரவுங்கூடும்.

துரோணர்:—ஸூதனே! சொல், சொல். அவன் எப்படிப் பிடிபட்டான்?

[illegible]
[illegible]
[illegible]
[illegible]

அபிமன்யுவின் இரதம் கீழே விழுந்துவிட்டதா? புரவிகள் சபலமுள்ளவைகளா? தரை, தேர்ச்சக்கரங்கள் நகரமுடியாதபடி ஆகிவிட்டதா? இரண்டு அம்பறாத் தூணிகளும்பாணமற்றவையாக ஆய்விட்டனவா? உன்னால் தேரைச் செலுத்தமுடியவில்லையா? நாண்கயிறு அறுந்ததால் வில் உபயோகமற்றதாக ஆகிவிட்டதா? தெய்வவசமாக இவ்வகைத்தோஷங்கள் நேரக்கூடியவையே! அவன் நன்றாகப் போர்புரியவல்லவனே; பிறரால் அவன் எப்படிப் பிடிக்கப்பட்டிருப்பான்?

தேர்ப்பாகன்:—எஜமானே! தனுர்வேதமே புருஷவடிவெடுத்ததுபோல் விளங்கும் தங்களுக்குத் தெரியாததில்லையே.

[illegible]
[illegible]
[illegible]
[illegible]

தாங்கள்கூறிய தோஷங்கள் ஒன்றுமே ஏற்படவில்லை. மகாரதனை அபிமன்யுவோ அம்புமழையைப் பொழியவல்லவன்; அம்புகளாகிற நெருப்பைச் சிந்துவதும் நெருப்பை வட்டமாகச் சுற்றுவதுபோற் சுழல்வதுமான தேரில், வலிமிக்கவனான காலாள் ஒருவன் திடீரென்று ஏறி, அபிமன்யுவைப் பற்றிக் கொண்டுபோனான்.

எல்லோரும்:—என்ன! என்ன! காலாளா?

துரோணர்:—அவன் எப்படிப்பட்டவன்?

தேர்ப்பாகன்:—எதைச்சொல்லட்டும்? உருவத்தையா? வலிமையையா?

பீஷ்மர்:-உருவத்தைக்கொண்டு மகளிரும் பராக்கிரமத்தைக்கொண்டு ஆடவரும் வருணிக்கப்படுவார்கள். அவனுடையவலிமையை விவரிப்பாயாக.

தேர்ப்பாகன்:—எஜமானே!

துரியோதனன்:—

கிஶ்ய-ேம் ஹூ-பெடெ கொZவி ஹவதா ஶஹி-்தாக்ஷஸெ॰ஃ।
கயூ஡தாம் நாஷூ ௐ ஞாவெஷா யஜெூவ வவ஡நா ஜவெ॥

அவனைப்பற்றி வெளிப்படையாய் விவரிக்கலாம். அவன் வேகத்தில் வாயுவை ஒத்தவனுயினும், நான் அஞ்சேன்.

தேர்ப்பாகன்:—மகாராஜா! கேட்கவேண்டும்.

ஶுஂவயிவூா ஜவெ஡நாஸூாநு ந்஝ஸூஸூாவஷஸெ॰ கஶஃ।
வ஡ஷாஶிதஷயதீூவொ நிக்ஷஂவஸூ ஶயஃ ஷூிதஃ॥

அவன் விரைந்து குதிரைகளைத்தாண்டித் தேர்த்தட்டி, கையைவைத்தமையால் நீண்டகழுத்தையுடைய குதிரைக பூட்டிய தேர் அசையாமல் நின்றுவிட்டது.

பீஷ்மர்:—ஆதலால் நாம் ஆயுதங்களை வைத்துவிடலாம். (அபிமன்யுவை விடுவிக்கமுயலவேண்டாம்.)

எல்லோரும்:—ஏன்?

பீஷ்மர்:—

ஹூதவூவெஶொ யஜி பாஹுூநா ஶயொ
வூகொஷஶஸூாஂகமதஃ ஸ விஜ்ஞூதாழ।
வூா ஹி தெந ஊூவஷா஥ஜாஂ ஹஶநு
வஷா஦ிெநவாவஜிெதா ஜயஊூயஃ॥

ஒருகையாலே தேர் நிறுத்தப்பட்டதானல், வீமனுடை மடியில் அபிமன்யு இருப்பதாகவே நிச்சயமாக நினைத்துக்கொள் லாம். முன்பு துரோபதையைத் தேரில் ஏற்றிக்கொண்டு சயத் ரதன் கொண்டுபோகும்போது, வீமன் காலாளாகவந்தே தே நிறுத்தினுன்.

துரோணர்:—கங்காதேவியின்புதல்வர் நன்றுக இயம்பின இளம்பருவத்தில் அவனுக்குக் கற்பித்ததிலிருந்து அவனுடை வேகத்தை நானறிவேன்; வில்வித்தைகற்குமிடத்தில்,

கர்ணாயதே யேந ஶரோ விக்ருஷ்டே
விலம்பிதம் தஸ்ய ஶிரோ வியோகே ।
முக்தா ததா தேந ச பாணதூர்யாத்
ப்ராப்தலக்ஷ்ய: ஸ ஶரோ க்ருஹீத: ॥

கற்கும்போது, நாண்கயிற்றைக் காதுவரையிழுத்து வீமனல்
ம்பு எய்யப்பட்ட சமயத்தில், அவன் தலை சற்று அசைந்த
தென்று நான் சொன்னேன்; உடனே அம்பின்வேகத்துக்குச் சரி
ாக அதைப் பின்றொடர்ந்து ஓடி, அவ்வம்பு இலக்கை அடிக்கு
ன், அவன் அந்த அம்பைக் கைப்பற்றிக் குழந்தையைப்போல்
கொணர்ந்துவிட்டானே!

சகுனி:—ஓ! தாங்கள் சொல்வது வேடிக்கையாயிருக்கிறது;
ங்களைக் கேட்கிறேன்.

நாஸ்த்யந்யோ பலவாந்லோகே ஸர்வம்மித்ரேஷு கத்யதே ।
ஜகத்வ்யாப்தாந் பவாந் கிம் ஸர்வே பஶ்யஸி பாண்டவாந் ॥

அப்படியானல், உலகத்தில் வலியோன் வேறொருவனுமே
ல்லைபோலும்; நண்பர்கள்விஷயத்தில் எதையும் சொல்வி
டலாமோ? அவர்களிடம் எதுவும் இருப்பதாகச் சொல்ல
ாகுமோ? உலக முழுவதும் பாண்டவர்களே வியாபித்திருப்ப
ாகத் தாங்கள் காண்கிறீர்களா?

பீஷ்மர்:—காந்தார அரசனே! எல்லாம் அநுமானத்தாலேயே
ிச்சயிக்கப்படுகின்றன.

வயம் வ்யபாஶ்ரித்ய ரதம் ப்ரயாம:
ஶஸ்த்ராணி சாபாநி ரதாஶ்ரிதாநி ।
த்வாவேவ தோர்வீர்யம் ஸமரே ப்ரயாதௌ
ஹலாயுதஶ்சைவ வ்ருகோதரஶ்ச ॥

நாம் தேரில் ஏறிக்கொண்டு போர்செய்வோம்; வில்லும்
டைக்கலங்களும் தேரில் இருக்கும்; ஆனல் தோள்வலியால் போர்
செய்வோர், கலப்பையை ஆயுதமாகக்கொண்ட பலராமனும் விரு
காதரனன வீமசேநனுமாகிய இருவருமே.

சகுனி:—அப்படியானல்,

ஊகெ௵ நவ வயம்ஹநூ: ஸஹஸா ஸாஹஸவியா:।
உத்தரஂச தஂவெஶ்யெ கூயிஷ்யந்தி ஹஹூநழு॥

சூரர்களாகிய நம்மைப் போரில் முறிய அடித்தவனான உத்தரனையும், சிலர் அர்ஜுனனென்றே சொல்லுவார்கள்.

துரோணர்:—ஓ! காந்தாரவரசனே! இங்கேயுமா உனக்குச் சந்தேகம்?

கிஂதுதரொணாவி ரணெ விகூஷ்யெதெ
நிஷ்டஶஂஷாஶநிமஜிதஂ யநு:।
கிஂதுரஸ்யாவி ஶரொஹதா தவ:
கூதா ஂஹமிதஂஷுதா ஜிவாகர:॥

யுத்தத்தில், வறட்டு இடியைப்போல் முழக்கஞ்செய்கிறதான வில்லானது உத்தரனால் இழுக்கப்படுமா? உத்தரனும் அம்புகளால் சற்றுமறைக்கப்பட்டுச் சூரியன் அஸ்தமித்தவனைப் போலச் செய்யப்படுவானு?

பீஷ்மர்:—காந்தாரியின்புதல்வனே! விளக்கமாகச் சொல்லுகிறேன். உனக்குத் தெரியாதா?

஬ாணவஂ வாக்ஷரெவஂரெவ்ஜ்யஂஜிஹ்வாவரிவதிஂஹி:।
விகூஷ்டஂ வஹூ வாயெந ந வஶ்ரோதூஂ வ்யயஹுதி॥

அம்புகளின் அடிகளிலிருப்பவையான எழுத்துக்கள் உள்ளதும், நாண்கயிருன நாவினுல் உச்சரிக்கப்படுகிறவையுமான வாக்கியங்களுடன்கூடின வில்லானது பார்த்தனுல் இழுக்கப்பட்டதை நீ கேட்டதில்லையா?

தேர்ப்பாகன்:—(புகுந்து) எஜமானே! வெற்றிபெறுக; சாந்தி செய்யவேண்டும்.

பீஷ்மர்:—எதற்காக?

தேர்ப்பாகன்:—

உஹிதஂ தெ வஶா கூதஂ யுஜெ ஬ாணவ்யயஷிதெ।
கயஂஹிவாண: கஸ்யாவி வஂவெநாஶீயதெ॥

அம்பினுல் தேரின்கொடி அடிபட்டால் சாந்திசெய்வது மரபு. இந்த அம்பு யாருடையபெயரையோ குறிக்கிறது.

பீஷ்மர்:—(வாங்கிப்பார்த்து) குழந்தாய்! காந்தாரவாசனே! கிழத்தனத்தால் எனக்குப் பார்வை மங்கியிருக்கிறது; இந்த அம்பி லுள்ளபெயரைப் படித்துரைப்பாயாக.

சகுனி:—(வாங்கிப்படித்து) அர்ஜுனனுடையது; (என்று எறிய, அது துரோணருடையகால்களில் விழுதல்.)

துரோணர்:—(அம்பினை எடுத்து) குழந்தாய்! வா, வா.

𑌮𑌮 𑌶𑌿𑌷𑍍𑌯𑍇𑌣 𑌯𑍋 𑌮𑍁𑌕𑍍𑌤𑍋 𑌗𑌾𑌂𑌗𑍇𑌯𑌂 𑌵𑌨𑍍𑌦𑌿𑌤𑍁𑌂 𑌶𑌰𑌃।
𑌪𑌾𑌦𑌯𑍋𑌃 𑌪𑌤𑌿𑌤𑍋 𑌭𑍂𑌮𑍌 𑌮𑌾𑌂𑌚 𑌯𑍇𑌨𑌾𑌭𑌿𑌵𑌨𑍍𑌦𑌿𑌤𑍁𑌮𑍍॥

என்னுடைய மாணவனுல் எறியப்பட்ட அம்பானது முதலில் பீஷ்மருடைய அடிகளில்விழுந்து, பிறகு பூமியில்விழுந்து என்னை யும் வணங்கியதுபோலும்.

சகுனி:—ஓ! அப்படியன்று; அம்பில் உள்ள எழுத்தால் நாம் ஒருமுடிவுக்குவரக்கூடுமா?

𑌯𑍋𑌧𑌃𑌸𑍍𑌯𑌾𑌦𑌰𑍍𑌜𑍁𑌨𑍋 𑌨𑌾𑌮 𑌤𑍇𑌨 𑌨𑌾𑌮𑌾𑌂𑌕𑌿𑌤𑌃 𑌶𑌰𑌃।
𑌲𑌿𑌖𑌿𑌤𑌂 𑌚𑍋𑌤𑍍𑌤𑌰𑍇𑌣𑌾𑌪𑌿 𑌪𑍍𑌰𑌕𑌾𑌶𑌮𑍁𑌪𑌨𑍀𑌯𑌤𑌾𑌮𑍍॥

உத்தரனுடைய படையாட்களில் ஒருவனுக்கு அர்ஜுனன் என்று பெயரிருந்து, அவன் இந்த அம்பை எய்திருக்கலாம். பார்த்தனுகிய அர்ஜுனனே இந்த அம்பினை எய்தான் என்று உத்தரன்கையால் எழுத்து வருமானுல் அப்பொழுதுமட்டும் நம்பிக்கைகொள்ளலாகும்.

துர்யோதனன்:—

𑌤𑍇𑌷𑌾𑌂 𑌰𑌾𑌜𑍍𑌯𑌪𑍍𑌰𑌦𑌾𑌨𑌾𑌯𑌾𑌨𑍃𑌤𑌂 𑌕𑌥𑍍𑌯𑌤𑍇 𑌯𑌦𑌿।
𑌰𑌾𑌜𑍍𑌯𑌸𑍍𑌯𑌾𑌰𑍍𑌧𑌂 𑌪𑍍𑌰𑌦𑌾𑌸𑍍𑌯𑌾𑌮𑌿 𑌯𑌾𑌵𑌦𑍍𑌦𑍍𑌰𑌕𑍍𑌷𑍍𑌯𑍇 𑌯𑍁𑌧𑌿𑌷𑍍𑌠𑌿𑌰𑌮𑍍॥

அவர்களுக்கு நாடுகிடைப்பதற்காகப் பொய்சொல்லப்பட்டா லும், யுதிஷ்டிரரைக் கண்ணுற் கண்டவுடன் அவர்களுக்கு நாட்டிற் பாதி கொடுப்பேன்.

வேலையாள்:—(புகுந்து) விராடநகரத்திலிருந்து தூதன் வந் திருக்கிறுன்,

துர்யோதனன்:—அழைத்துவரலாம்.

வேலையாள்:—மகாராஜா உத்தரவுப்படி. (வெளியேறுதல்)

உத்தரன்:—(பிரவேசித்துத் தனக்குள்)

அஶ்வாநாம் த்வரிதத்வாத் ரத்ஜவேகஸ்ய ச
மார்கஸ்தா வஸுதா யேந விலம்பிதம் மே।
கௌந்தேயபாணநிஹதை கஜேந்த்ரதேஹை:
து:கேந யாந்தி துரகா விஷமே ஹி மார்கே:॥

மிக்க விரைவுடைய குதிரைகளையூர்ந்துவருகிறவனான எனக்கும் வழியில் பார்த்தனுடைய பாணங்களாலடிபட்டுக் கீழேவிழுந்து கிடக்கிற யானைகளால் தரை சமமாயிராமல் மேடுபள்ளமாயிருந்ததால் அவற்றைத் தாண்டிவரத் தாமதமாகிவிட்டது.

(வெளிப்படையாய்) ஆசார்யர், பிதாமஹர் இவர்களை முன்னிட்டுக் கொண்டிருக்கிறவர்களான அரசர்கள் எல்லாரையும் நான் வணங்குகிறேன். (வணங்குதல்.)

எல்லாரும்:—தீர்க்காயுள் உள்ளவனாய் இருப்பாயாக.

துரோணர்:—பெரியோரான விராடவரசர் என்ன சொல்லியனுப்பினார்?

உத்தரன்:—நான் அவரால் அனுப்பப்படவில்லை.

துரோணர்:—ஆனால் நீ யாரால் அனுப்பப்பட்டாய்?

உத்தரன்:—பெரியோரான யுதிஷ்டிரரால்.

துரோணர்:—தர்மராஜன் என்னசொல்லுகிறான்?

உத்தரன்:—கேட்கவேண்டும்.

உத்தரா மே ஸ்நுஷா லப்தா ப்ரதீக்ஷே ராஜமண்டலம்।
தத்ரைவ க்ரியதாமஸ்ய விவாஹ: ஶ்வோऽதவாத்ய வா॥

உத்தரையை நான் மருமகளாக அடைந்தேன்; அரசமண்டலத்தின் வரவை எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறேன்; விவாகத்தை அங்கே நடத்தவேண்டுமா? அல்லது நாளையே இங்கே நடக்கட்டுமா?

சகுனி:—அங்கே, அங்கே.

துரோணர்:—

ஏதத்தர்தம் வயமாநீதா: பஞ்சராத்ரோபி வர்த்ததே।
யத்தர்ம்மேணார்ஜிதா பிக்ஷா யத்தர்ம்மேணைவ தீயதாம்॥

இதற்காக நாங்கள் இங்கே அழைத்துவரப்பட்டோம். ஐந்து நாள் அவதி நிகழ்ந்துகொண்டிருக்கிறது; இன்னும் முடியவில்லை; தர்மத்தை அநுசரித்து எனக்குக் கொடுப்பதாக வாக்களித்துள்ள (பாண்டவர்களுக்கு நாட்டிற் பாதி கொடுப்பதான) பிக்ஷையைத் தர்மத்தாலேயே (உண்மை தவறாமல்) நீ கொடுப்பாயாக.

துர்யோதனன்:—

பாடம் தத்தம் மயா ராஜ்யம் பாண்டவாநாம் யதாபுரா।
ம்ருதா அபி ஹி நரா: ஸர்வே ஸத்யே திஷ்டந்தி திஷ்டதி॥

முன்பு இருந்தபடியே பாண்டவர்களுக்கு என்னால் நாடு கொடுக்கப்பட்டது; உண்மையுடையவரானால், இறந்தபிறகும், எல்லாமனிதர்களும் உயிருடன் இருப்பவர்களே.

துரோணர்:—

ஹந்த ஸர்வே ப்ரஸந்நா: ஸ்ம: ப்ரவ்ருத்தகுருஸங்க்ரஹா:।
இமாமபி மஹீம் க்ருத்ஸ்நாம் ராஜஸிம்ஹ: ப்ரஶாஸ்து ந:॥

அம்மம்ம! குருவம்மிசம் க்ஷேமமுள்ளதாகிவிட்டது; நாமெல்லோரும் ஆநந்தமடைந்தோம்; இப்பூமிமுழுவதையும் நம்மையும் ராஜஸிம்மன் ஆள்வானாக.

(எல்லோரும் வெளியே செல்லுதல்.)

மூன்றவது அங்கம் முற்றும்.

பாஞ்சராத்திரம் முற்றிற்று.

V. S. ராமஸ்வாமிசாஸ்திரி, B.A., B.L.

யவனர்வரலாறு.

[யாழ்ப்பாணம் ஸ்ரீமான். த. இராமநாதபிள்ளை B.A., (LOND.) அவர்கள்.

(கூச-ஆம் தொகுதியின் கூஉகூ-ஆம் பக்கத் தொடர்ச்சி.)

இத்தாலியதேசத்து ஆட்சிவரலாறு.

கி. மு. மூன்றாம்நூற்றாண்டில் உரோமர் தமது ஆட்சியை இத்தாலியதேச முழுவதும் செலுத்தினர். அவர், பிறசாதியின யாவரையும் வென்று அவர்கள் நாடுகளில் தம்மக்களைக் குடி யேற்றினர். இந்நூற்றாண்டில் உரோமக் குடியரசு மிகு வலிமை பெற்று மத்தியதரைக்கடற்பாகங்களில் பிறநாட்டரோடு பகை துப் போர்புரிந்தது.

சம்நிதியர் போர்.

சம்நிதியர் உரோமருடைய அயலோராயினும் வேற்றின தைச் சேர்ந்த ஒருகூட்டத்தினரே. சம்நிதியர் சமயப்பற்றாலு ஒழுக்கத்தாலும் சிறந்தோரென அறிகிறோம். சபேரியர், உம்பி யர், சம்நிதியர்: என்போர் ஒரு குழுவினரே. சம்நிதியர் வீரத்தா புகழ்பெற்றோராயினும் தம்முள் ஒற்றுமையின்மையால் உரோ ரால் அடக்கப்பட்டனர். கி. மு. ஐந்நூறில் சம்நிதியர் எற்றியரை துரத்திக் கம்பேனிய கிரேக்கரை அடக்கி அவர்கள் நாடுகளிலு குடியேறினார்கள்.

முதலாம் சம்நிதிய யுத்தம். கி. மு. 326—321

கி. மு. 343-ஆம் ஆண்டில் கிரேக்கநாகரிகத்தைத்தழுவி கப்புவாநகரத்தோர் உரோமருதவியை வேண்டித் தூதனுப்பி ராக, உரோமர் அவ்வேண்டுகோளுக்கிணங்கிச் சம்நிதியரோடு போ தொடங்கினார்கள். உரோமருடைய இணைத்தலைவரே படை தலைமைவகித்தல் வழக்கமாதலால் 343-ஆம் ஆண்டில் இணைத்த வரில் ஒருவனான வலேரியஸ் காக்கையன் என்பான் சம்நிதியநா சென்று அவர்களைக் கவரிஸ்மலையில் நிகழ்ந்தபோரில் வென்றா மற்ற இணைத்தலைவன் அவுலஸ் கேணிலியஸ் கொசஸ் என்பா வேறோர்களத்தில் சம்நிதியரை வென்றான். இருதலைவரும் க

படையை ஒருங்குசேர்த்துப் பகைவரை ஸுவஸ்பாப் போரில் வென்றனர். இலிவியஸ் என்பார் தம்வரலாற்றுள் இப்போரில் பற்பதினுயிரம்சம்நிதியர் மாண்டனரெனக் கூறினர். இப்பெருஞ் சேனை வெள்ளம் அழிந்ததோவெனப் பலர் ஐயுறுகின்றனர். ப்புவாநகரின் மூலப்படை நகரத்தலைவனெடு வேறுபட்டுப் பகைப் படையாக மாறிற்று. சில இலத்தின் நகரங்களும் உரோமரொடு கைக்கலாயின. அக்காலத்தில் உரோமர் கம்பேனியநாடுகளையும் மது ஆட்சிக்குட்படுத்தினர். கி. மு. 327-ஆம் ஆண்டில் கூமாயி கரத்துக் கிரேக்கர் சிலர் நியாப்போலி, பலியாப்போலி என்னு டங்களிற் குடியேறினர்கள். கிரேக்கக்குடிகள் கப்புவாவில் லகம்விளைத்தனர்; ஆதலின் உரோமர் கப்புவாநகரத்தோருக்குத் ணைபுரிந்து கிரேக்கர் குடியேறியநாடுகளைக் கைப்பற்றினர். . மு. 326-ஆம் ஆண்டுமுதல் மறுபடியும் சம்நிதியரும் உரோமரும் பாருதனராயினும், அவர்களுள் வெற்றி தோல்விகள் நிகழவில்லை. 24-ஆம் ஆண்டில் உரோமர் சம்நிதியரைப் புடைத்தனர். கி. மு. 21-ஆம் ஆண்டில் நிகழ்ந்த போரில் உரோமர்படை நாசமாயிற்று.)ணைத்தலைவரான பொஸ்தூமியனும், கல்வீனனும் தோல்வி டைந்தமையால் சம்நிதியருடைய தலைவனுன காயஸ் பொந்திய ஞெடு உரோமர்தலைவர்கள் உடன்படிக்கைசெய்துகொண்டார்கள். மன்மக்கட்சபையார், அவ்வுடன்படிக்கையை ஏற்காமல் தலைவர் ருவரையும் பொந்தியனிடம் ஒப்புவித்தனர். பொந்தியன் தன் பருந்தன்மையால் அவர்களை யாதொரு தீங்கும் செய்யாது டுதலைசெய்தான். உண்மை இவ்வாறிருப்ப, இலிவியஸ் என்பார் ரோமர் வென்றனர் என எழுதினர். கி. மு. 315-ஆம் ஆண்டில் பவிஸ் என்பான் உரோமநாட்டுத்தனித்தலைவனுகிப் போர்நடாத்தி ம் பல நகரங்கள் சம்நிதியர்கைப்பட்டன.

[தொடரும்.]

ஓர் அருஞ்செய்யுளுரை.

யாப்பருங்கலக்காரிகை ஒழிபியலில் "பொருளோடடிமு
னிற்பது" என்னும் காரிகையின் குணசாகரருரையில்,

காதம சூக விநதிதுனி கண்புருவஞ்
சீதமுகங் கொங்கை திரண்டவா—யோதக்
கரும்பார் மழபாடிக் காங்கேயன் பட்டத்
தரும்பார் குழலளகத் தார்க்கு.

என ஒருதாரணச்செய்யுள் உண்டு.

பதிப்பாசிரியரொருவர், இதனுள் "சீதமுகம்" என்ற சீ
"சீதமும்"என்றுபதித்து, இவ்வெண்பா முன் பதிக்கப்பட்டிலதெ
வும் இதன் சரியானபாடம் கிடைக்கவில்லை எனவும் குறித்தனர்.

இச் செய்யுளுக்குப் பொழிப்புரை:—'மொழி கரும்புபோல்
மழபாடிக்குத்தலைவனாகிய காங்கேயனது பட்டமகிஷிக்குக் கா
போன்ற கண்ணும், விற்போன்ற புருவமும், மதிபோன்ற த
முகமும், சூதாடுகருவிபோன்ற திரண்ட கொங்கைகளும், க
போன்ற வாயும் உள்ளன' என்பது.

இச்செய்யுள் நிரனிறைவகையுள் எழுத்துநிரனிறை என்
பொருள்கோளமைந்தது. இதனுள் முதல் எழுத்தாகிய '
என்பதனை ஆறும் எழுத்தாகிய 'வி' என்பதனோடு ஒட்டிக் "கா
என்று கொள்ளுக. இங்ஙனமே இரண்டாமெழுத்தாகிய 'த' எ
பதனை ஏழாமெழுத்தாகிய 'நு' என்பதனோடு ஒட்டித் "த
என்றும், மூன்றாமெழுத்தாகிய 'ம' என்பதனை எட்டாமெழு
தாகிய 'தி' என்பதனோடு ஒட்டி "மதி" என்றும், நான்காமெழு
தாகிய 'சூ' என்பதனை ஒன்பதாமெழுத்தாகிய 'து' என்பதனோ
ஒட்டிச் "சூது" (சூது - சூதாடுகருவி.) என்றும், ஐந்தாமெழு
தாகிய 'க' என்பதனைப் பத்தாமெழுத்தாகிய 'னி' என்பதனோ
ஒட்டிக் "கனி" என்றும் கொள்ளக்கிடத்தல் காண்க. திரண்
கொங்கை என மொழிமாற்றுக.

இப்போது கூறிய உரையானும் "சீதமுகம்" எனத் திருத்
வதனானும் இச் செய்யுளின்பொருளும் சரியானவடிவமும் புலனா

க. குருமூர்த்தி ஐயர், நல்லூ

ஸ்ரீ:

மதிப்புரை.

சாசனத் தமிழ்க்கவிசரிதம்:—இது, சரித்திர ஆராய்ச்சியிற் பிர
த்திபெற்றுப் பல அரியவிஷயங்களைக் கண்டறிந்து தமிழுலகுக்கு
வளியிட்டுவருபவரும், பெருந்தொகையென்னும் சிறந்தநூலைத்
காகுத்துப்பலவகை ஆராய்ச்சிக் குறிப்புக்களுடன் உதவியவரும்,
ன்னைப் பல்கலைக்கழகத்துத் தமிழ்லெக்ஸிகனுபீஸ் தலைமைப்
ண்டிதரும் ஆன இராமநாதபுரம் வித்வான் ஸ்ரீமத். மு. இராக
வயங்காரவர்களால், சாசனங்களிலிருந்து அறியக்கிடந்த புலவரும்
ரவலருமான தமிழ்ப்பெருமக்கள்சரிதம் முதலியவற்றைக் கால
றைப்படி தொகுத்தெழுதி வெளியிடப்பட்டது; சங்ககாலப்புல
ர், இடைக்காலப்புலவர், பிற்காலப்புலவர் என்னும் மூன்றுபகுதி
ரில் எண்பதுக்குமேற்பட்ட புலவர்களைப்பற்றிய சிறந்த குறிப்புக்
ளையுடையது; இதனுட் கூறப்படும் புலவர்காலம், அவர்கள்செய்த
ல் முதலியவைகளை விளக்கும் உள்ளுறைவிவரமும் பொருட்
றிப்புமுதலியனவும் உடையது; நல்ல காகிதத்தில் திருத்த
கவும் அழகாகவும் அச்சிடப்பட்டது. தமிழ்ப்புலவர்சரித
மழுதுவார்க்குப் பெரிதும் பயன்படத்தக்கது. இதனைத் தமிழ்
க்கள் நன்கு ஆதரித்து, ஐயங்காரவர்கள் இத்துறையில் மேலும்
யன்று தமிழ்ப்புலவர்சரிதங்களை விரிவாயெழுதி வெளியிடுமாறு
சய்வார்களாக.

இதன்விலை ரூ 1–4–0. வேண்டுவோர் 'வித்வான். ஸ்ரீமத். மு.
ராகவையங்காரவர்கள், (தமிழ்லெக்ஸிகனுபீஸ் தலைமைப்பண்
தர்), 14. சிங்காசாரியர்தெரு, திருவல்லிக்கேணி, சென்னை'
ன்ற விலாசத்துக்கு எழுதிப் பெறலாம்.

அங்கம் - III.

களம் - 2.

இடம்:—ரவிநதிக்கரையில் ஒரு சத்திரம்.

காலம்:— மாலை.

பாத்திரங்கள்:—யமுனை, விகலன், சந்திரன்தூதர் முதலியோர்.

விகலன்:—அம்மா! வெகுகாலமாய் நாம் ஒன்றும் நிச்சயமில்லாமல் பிரயாணஞ்செய்துகொண்டிருந்தால் நாம் எங்கே செல்வது?

யமுனை:—நாம் செல்லும்வழிச் சென்றுகொண்டிருந்தால் தெய்வம் விட்டவழி விடுகிறது.

விகலன்:—தெய்வம் விடும்வழியையே முழுதும் நம்பியிருந்தால் நாம் ஊரிலேயே இருந்திருக்கலாமே?

யமுனை:—அப்படிச்செய்திருந்தால் நலந்தானென்று எனக்கு இப்பொழுதுதான் தோற்றுகிறது. உன்னையாவது இவ்வளவு வருத்தத்துக்குள்ளாக்காமலிருந்திருக்கலாம்.

விகலன்:—எனக்கென்ன வருத்தம்? உங்களை உபசரிப்பது எனக்குமேன்மேலும் உள்ளக்கிளர்ச்சியைக் கொடுக்கிறதேயொழிய வேறில்லை.

யமுனை:—உனக்கு மகிழ்ச்சியாய்த்தானிருக்கும். ஆனால் அவைகளை யேற்றுக்கொள்ள எனக்கு மனம்வரவில்லை. இவ்வளவு வருத்தத்துக்கும் பயன் எப்பொழுதுகாண்போம்?

விகலன்:—பயனைக்கண்டால் வருத்தமே மறந்துவிடும். அப்பயனையடைய நாம் இங்ஙனம் போய்க்கொண்டிருப்பது சரிதானா?

யமுனை:-நான் தினந்தோறும் நடந்து என் அருமைக்குமாரனைப் பின்விட்டுவருகிறேனோ என்னவோ? எல்லாம்வல்ல ஈசனருள் எங்ஙனம் இருக்குமோ? நாம் இவ்வளவுகாலம் விசாரித்துவந்தவரை இவ்வழியில் அவன் சென்றதாகத் தெரியவில்லை.

விகலன்:—அவர் போனதை நாமறியக்கூடுமானால் வேறு யாரேனும் அறிந்து சொல்லியிருக்கமாட்டார்களா? அதனால்தான் நாம் ஒன்றும் அறியமுடியவில்லை.

யமுனை:—நீ சொல்வது சரி. ஆனால், நாம் ஆதியில் உத்தேசித்த இடம்வரை போய்த் திரும்பி நேரே ஊர்சென்றுவிட வேண்டியதுதான்.

விகலன்:—[தனக்குள்] என் அன்பர், "என்னைப்பற்றி மூன்று மாதகாலத்தில் உனக்குத் தெரிவிப்பேன். நீ சற்றும் கவலையுற வேண்டாம்'' என்று சொல்லிப்போனார். அதில் பாதிக்குமேலாய் விட்டது. இனி நான் பாஞ்சாலநாட்டின் எல்லைகண்டு திரும்பி ஊர் சேர்வதற்குள் அவர்தூதன் என்னைக் காணாது திரும்பிவிடுவன். அவனையாவது நான் கண்டால் அவரைப்பற்றி நேரே அறியலாம். ஒருவேளை அவர் என்னை மறந்திருப்பாரோ? அல்லது அவர் தூதன் இதற்குள் ஊர்வந்து திரும்பியிருப்பானோ? எதற்கும் சீக்கிரம் ஊர்போய்ச்சேர்தலே நல்லது. சாகரனும் எங்கேயிருக்கிறானோ? [யமுனையைநோக்கி] அம்மா! எல்லாவற்றையும் யோசித்துப் பார்த்தால் நாம் இப்பொழுதே திரும்பிவிடுதல் நல்லதாகும். உம் அருமைக்குமாரர் உம்மை மறந்துவிடார். யாரையாவது அவர் உம்மை அழைத்துவரும்படி ஊருக்கனுப்பினும் அனுப்புவார். நாம் இருக்குமிடமும் அவருக்குத் தெரியாமல் நாம் இப்படியிருப்பது சரியல்ல. எதற்கும் திரும்பிவிடுவோம்.

யமுனை:—ஆனால் அப்படியே செய்யலாம். ஆயினும், எனக்கேதோ நாம் நினைத்த இடத்திற்குப் போய்த்தான் திரும்பவேண்டுமென்று மனதில் பிடிவாதமாய்த் தோன்றிக்கொண்டிருக்கிறது.

விகலன்:—[தனக்குள்] இந்தக் கிழவிகள்பிடிவாதம் பொல்லாது. இவளைப் பின்பற்றி நானும் இங்கேவந்தது தவறாய்முடிந்தது. என் ஓலையை நிராகரித்துவிட்டுச் சாகரன் ஊரைவிட்டுப் போயிருக்கமாட்டான். இந்தக் கிழவிக்குதவியாய் இவ்வளவுதூரம் வந்துவிட்டு, இவளை எங்ஙனம் விட்டுச்செல்வது? இவளோ நாம் எவ்வளவுசொன்னாலும் தன் பிடிவாதத்தை நிறைவேற்றுவாள்போலத் தோன்றுகிறாள். இப்பொழுது ஒன்றும் தோன்றவில்லை.

[இரண்டு குதிரைவீரர்கள் சத்திரத்தில்வந்திறங்கி யமுனையை அணுகுதல்.]

உத்தரன்:—பாட்டியம்மா! இங்கே ஏதேனும் சாப்பாட்டுக்கு இடமுண்டோ?

யமுனே:—இது வழிப்போக்கர்கள் தங்கும் சத்திரம். இங்கே சாப்பாட்டுக்கு ஒன்றும் ஏற்பாட்டைக் காணேம். நீங்கள் வந்ததும் மிகவும் அகாலமாயிருக்கிறதே?

உத்தரன்:—எங்கள் காரியத்தில் ஓரிடத்திலும் தாமதியாமல் போகவேண்டியது அவசியமாயிருக்கிறபடியாலும் சிலர் இந்தச் சத்திரம் சமீபத்திலிருக்கிறதென்று சொன்னதாலும் நாங்கள் அகாலத்தில் இங்கு வந்தோம். இந்தச் சத்திரத்தில் ஒருவருமில்லையோ?

யமுனே:—இங்கே ஒரு துர்முகிக்கிழவர் இருக்கிறார். அவரை எதுகேட்டாலும் 'எனக்குத் தெரியாது' என்றும், இல்லையென்றும் சொல்லிக்கொண்டிருக்கிறார். அவர் சிடுசிடுப்பும் கோபமும் மனிதர்கள் சஹிக்கமாட்டார்கள்.

உத்தரன்:—இந்தச் சத்திரத்தில் யாருக்காவது சாப்பாடுண்டா?

யமுனே:—அந்த விஷயங்கள் அவரைத்தான் கேட்கவேண்டும். நாங்கள் இன்றுதான் வந்தோம். சமையல்செய்து சாப்பிட்டோம்.

உத்தரன்:—கட்டிடம் இவ்வளவு பெரியதாயிருக்கிறதே? இங்கே சாப்பாடில்லாமற்போகுமா?

சித்திரன்:—திட்டத்திலிருக்கும். வழக்கத்தில் இராது.

உத்தரன்:—உனக்கென்ன வேலை? உள்ளேபோவோம். [வாயிற்படியடைதலும்.]

காவலன்:—[கைதொழுது] சாமி எசமான்! கும்பிடரேன்.

உத்தரன்:—யாரடா! காவற்காரனு?

காவலன்:—ஆமாம்; எசமாங்களே!

உத்தரன்:—இங்கே உள்ளே யாராவது இருக்கிறார்களா?

காவலன்:—தர்மகர்த்தா எஜமான் இருக்கிறுங்க. அவக பொஞ்சாதி புள்ளே குட்டிகள் எல்லாம் அடைஞ்சுகிடக்குது.

உத்தரன்:—தர்மகர்த்தாவிடத்தில் இரண்டு வழிப்போக்கர்கள் வந்திருக்கிறார்களென்று சொல்.

காவலன்:—நீங்களே போய்ச் சொல்லலாம்.

[உத்தரனும் சித்திரனும் உள்ளே செல்லல்.]

தர்மகர்த்தா:-யாரங்கே? [என்று கேட்டுக்கொண்டு வெளியேவரல்]

உத்தரன்:—நாங்களிருவர் வழிப்போக்கர்கள்.

தர்மகர்த்தா:—வழியோடுபோகிறவர்களானல் உள்ளே உங்களுக் கென்னவேலை?

உத்தரன்:—வேலையாய்த்தான் வந்தோம்.

தர்மகர்த்தா:—அடே! சொல்லுமே?

உத்தரன்:—இங்கே சாப்பாடு கிடைக்கக்கூடுமானல் அதற்குப் பணம் கொடுத்துவிடுகிறோம்.

தர்மகர்த்தா:—இதென்ன? சோற்றுக்கடையென்று பார்த்தீர்களோ?

உத்தரன்:—இது தர்மசத்திரந்தானையா. இது நீர் எனக்குச் சொல்லவேண்டாம். அகாலத்தில் வந்தோமே என்று சொன்னேன்.

தர்மகர்த்தா:—அகாலத்தில் வந்தால் படுத்துக்கிடங்கள். இடமிருக்கிறது.

சித்திரன்:—இந்த அதர்மகர்த்தாவைத்தானு தர்மகர்த்தாவென்று வாயில்காவலன் சொன்னன்?

தர்மகர்த்தா:—[முகம் சிவந்து கோபங்கொண்டு] யாரடா! தாறுமாறுய்ப் பேசுகிறது?

உத்தரன்:—அவன் கிடக்கிறன், சிறுபயல்.

தர்மகர்த்தா:—சாப்பாடெல்லாம் மத்தியானமே ஆய்விட்டதே!

உத்தரன்:—இங்கே சாப்பாட்டுத்திட்டமுண்டோ?

சித்திரன்:—இவர்களுக்கில்லாமலா இருக்கும்?

தர்மகர்த்தா:—ஏய்! கண்டபடி பேசாதே. [உத்தரனை நோக்கி] உங்களுக்குச் சாப்பாடு கிடையாது. சாயங்காலம்வரை பொங்கிவைத்துக்கொண்டு நீங்கள்வரும்வரை காத்திருப்பார்களோ? இங்கே பணத்துக்கும் சாப்பாடு கிடையாது; போங்கள்.

சித்திரன்:—சமையல்செய்ய இடமிருக்கிறதா?

தர்மகர்த்தா:—நீ அதிகப்பிரசங்கி; என்னோடு பேசாதே.

சித்திரன்:—இல்லை; அதர்மகர்த்தாவான உங்களால்தான் இந்தச்சத்திரம் நடந்துவரவேணும்.

தர்மகர்த்தா:—நடந்துதான்வருகிறது.

சித்திரன்:—சத்திரத்துத் திட்டத்திலுள்ளதை நீங்களே சமைத்துச் சாப்பிட்டுவிட்டுப் பிராமணபோஜனமாக்கிவிடுகிறீர்களாக்கும்.

தர்மகர்த்தா:—அதெல்லாம் உமக்கென்ன? கிடக்கிறதென்றால் என்ன மேலேமேலே பேசுகிறீர்?

சித்திரன்:—ஒன்றுமில்லை. அதர்மத்தைப் பரிபாலித்தல் மிகவும் கஷ்டமையா!

தர்மகர்த்தா:—சும்மாபோகிறீரா என்ன?

சித்திரன்:—சத்திரத்தில் வந்தவர்கள் சும்மாபோவார்களா அதர்மகருத்தாவை வைதுவிட்டுத்தான் போவார்கள்.

[உத்தரனும் சித்திரனும் வெளியில் வரல்]

விகலன்:—என்தாயார் சமையல்செய்துபோடுவதாகச் சொன்னாள். சற்றுப் பொறுங்கள்.

உத்தரன்:—அவள் மிகவும் கிழவியாயிற்றே!

விகலன்:—குற்றமில்லை. நான் ஜலமுதலானவை கொண்டு வந்து கொடுத்துவிட்டேன். உண்டுபோகலாம்.

சித்திரன்:—(உத்தரனைநோக்கி) இந்தச்சத்திரத்திலும் சமைத்துப்போட ஒருவரிருக்கிறார் பார்த்தாயா!

உத்தரன்:—நீங்கள் எவ்விடம்?

விகலன்:—நாங்கள் யாத்திரைக்காரர்கள்; பாடலீபுரத்திலிருந்து வருகிறோம்.

உத்தரன்:—நாங்கள் பாடலீபுரத்துக்குத்தான் போய்க்கொண்டிருக்கிறோம்.

விகலன்:—எங்கிருந்து வருகிறீர்கள்?

உத்தரன்:—பாஞ்சாலநாட்டிலிருந்து வருகிறோம்.

விகலன்:—உங்களைப்பார்த்தால் அரண்மனையுத்தியோகஸ்தர்கள்போல்தோன்றுகிறதே!

உத்தரன்:—ஆம். நாங்கள் அரண்மனைச் சேவகர்களே.

சித்திரன்: — அரண்மனையுத்தியோகஸ்தர்சேவகர்கள்; அவர் காரியமாய்ப்போகிறோம்.

விகலன்:—பாஞ்சாலநாட்டு அரண்மனையுத்தியோகஸ்தருக்குப் பாடலீபுரத்தில் என்னகாரியம்?

உத்தரன்:—அவன் கிறுக்குப்பயல். அவன்சொல்வதை நம்பாதீர்கள்.

சித்திரன்:— இவர்கள் பாடலீபுரமென்றுசொல்வதால் நாம் போகுங்காரியமாய் ஏதேனும் விசாரணை இங்கேயே செய்துகொள்வது நல்லதென்று சொன்னேன்.

உத்தரன்:—நீங்கள் பாடலீபுரத்தில் எங்கே வசிப்பது?

விகலன்:—நாங்கள் இருப்பது நேபாளஞ்செகுத்த நிருமலகுப்தர் அரண்மனைக்கு அடுத்த ஒரு சந்தில்.

சித்திரன்:—கோபாலமெடுத்த குப்பையபாகவதர் வீடோ?

உத்தரன்:—நீ சற்று வாயைமூடிக்கொண்டிருக்கமாட்டாயா?

சித்திரன்:—நான் வாயைமூடிக்கொண்டிருந்தால் நீ ஒரு விசாரணையும் செய்யமாட்டாய்; சும்மா இருப்பாய்.

உத்தரன்:—அந்தச் சந்தில் யார்வீடு?

விகலன்.—அங்கே என் தமயன் சாகரர் இருக்கிறார். நாங்களிருவருந்தான் இருக்கிறோம்.

சித்திரன்:—பார்த்தாயா? நாம்போகிற வீடு இங்கேயே வந்து விட்டது.

உத்தரன்:—சாகாரிடம் மிகுந்த அன்புடையவர் எம் தலைவர் அவர் ஒரு ஓலைகொடுத்து அதைச் சாகாரிடம் சேர்க்கும்படி எங் ளுக்குக் கட்டளையிட்டுள்ளார்.

விகலன்:—ஓலையில் என்ன எழுதியிருக்கிறதோ?

சித்திரன்:—அதிற்கண்டிருப்பதை யார்கண்டார்கள்? ஓ இதோ சட்டையிலிருக்கிறது.

விகலன்:—சரிதான். தாயார் கூப்பிடுகிருள். சாப்பிடவாரு கள். [என்று அவர்களை உள்ளேயழைத்துக்கொண்டுபோய்விட்டுத் தா மாத்திரம் வெளியில்வந்து சட்டையிலிருந்து ஓலையையெடுத்து வாசித்தல்.

"என் அன்புள்ள சாகரனுக்கு. ஈசன்செயலை எவரால் அறியமுடியு பாடலீபுரத்தைவிட்டு வரும்வழியில் மிகவும் எச்சரிக்கையாய்க் காலங்கழி து தக்ஷசைல மடைந்தேன். அங்கே சேனைத்தலைவரான சத்துருஜித்தி பால் வேலையில் அமர்ந்தேன். அவர் என்னிடத்தில் அதிக அன்புபாராட் வருகிருர். குறுநாட்டுப்போரில் என்னை ஒரு மகாரதனுக்கி, மெய்கா சேனைக்கு இரண்டு அர்த்தரதரையும் அனுப்பிவைத்தனர். என்கீழிருக் வீரர்களெல்லாம் என்னிடம் மிகுந்த வாஞ்சையுடையவரும் என்னுணை மறுது ஆற்றுவோருமாயிருக்கிருர்கள். நான் போரில்வென்று சிறைப்ப திய சிற்றரசர்களை அலக்ஷயேந்திரன்படைவீட்டிலிருக்கும் புருஷோத் ராஜரிடம் சேர்ப்பிக்க நாளை அழைத்துப்போகிறேன். இக்கடிதம் கண் வுடன் நீயும் உன் தங்கையும் தாயார் யமுனையும் இதுகொண்டுவரும் சேவக ளோடு தக்ஷசைலம் வந்துசேரவேண்டும். இன்னும் பதினைந்துநா நான் தக்ஷசைலத்துக்குத் திரும்பிவிடுவேன்".

இப்படிக்கு உனது அன்புள்ள
'சந்திரன்'

[என்று படித்து, ஓலையைச்சுருட்டிப் பையிற் போட்டுவிட்டு ஆ மிகுந்து நகைத்துநின்று கண்களில் ஆநந்தபாஷ்பம் பெருகத் தனக்கு என்னன்புக்கரசர் உயர்பதவியடைந்தார். அடைந்தும் என் மறவாமலிருக்கிருர். ஆதலின் யான் அவரைச் சென்றடை

வேண்டியது முறைமை. [என்று நினைந்து, காவற்காரனைக் கூப்பிட்டு ஒரு ஓலையும் எழுத்தாணியும் வாங்கி, ஒரு ஓலையெழுதிச் சுருட்டி ஒட்டி, உத்தரனும் சித்திரனும் வர அவர்களைநோக்கி,] நீங்கள் போஜனம் செய்தாய்விட்டதா? நான் ஏதோ சிறுபிள்ளைத்தனமாய் யோசனைசெய்து கொண்டிருந்தேன். உங்களைத் தனியே உண்ணும்படி விட்டு விட்டேனென்று வருந்தாதீர்கள்.

சித்திரன்:—ஒருவரும் பேச்சுக்கொடுத்துத் தொந்தரவுசெய்யாமல் சாப்பாடே ஞாபகமாய் நன்றாய்ச் சாப்பிட்டோம்.

உத்தரன்:—[சித்திரனைக் கோபித்துநோக்கி விகலனைப்பார்த்து] அதனால் குற்றமில்லை.

[உத்தரனும் சித்திரனும் சட்டைகள்போட்டுத் தயார்செய்துகொள்ளல்.]

விகலன்:—உங்களுக்குக் கொஞ்சம் சிரமம் கொடுக்கிறேன். நீங்கள் சாகரரிடத்தில் உங்கள் தலைவர்கொடுத்த ஓலையைக்கொடுக்கும்போது இந்த ஓலையையும் கொடுக்கவேண்டும்.

உத்தரன்:—ஆகா. அப்படியே செய்கிறேன்.

அங்கம்-III.

களம்—3.

[அலக்ஷயேந்திரன் படமாடத்தினருகில் ஒரு கருடிக்கூடத்திற் சுற்றிலும் ஜனங்கள் சூழ நடுவிற் கச்சைகட்டிக்கொண்டு சந்திரன் நிற்றல்]

அலக்ஷயேந்திரன்:—(உட்புகுந்து) சந்திரரே! இந்தக்கூட்டத்திலுள்ள என் சேனைத்தலைவர்பலரில் யாரோடு பொருவீர். அல்லது என்னோடு மற்போர் புரிவீரா?

2201 வானகத் துதயமா மதியு ஞாயிறுந்
தானமா மதற்கழ களிக்குஞ் சால்புபோற்
கோனகர்த் தான்வரு குடிக்குந் தன்னையுண்
டானநற் றயொடு மழக ளித்துளாள். (உ௩)

2202 இன்னணஞ் சிறந்தவ ளிடங்கொள் கற்பினைச்
சொன்னவ ரிடந்தொறுந் தூய தாமரைப்
பொன்மக ளுறைவது புகல வேண்டுமோ
வுன்னின ரிடந்தொறு முறையு மென்பவால். (உ௪)

வேறு.

2203 முருகு லாமலர் மொய்குழ லார்க்கெல்லாந்
திருவன் னுளிற் சிறந்தெழு செல்வத்தா
ளுருகு தாயொத் துயிர்க்குறு தோற்றத்தாள்
பருவ மாறிரண் டாமெனும் பான்மையாள். (உ௫)

வேறு.

2204 உரைத்த பருவத் தொண்குலத்தோ
டொன்றும் வனப்பிற் பெருந்திருவிற்
றிரைத்தெண் கடற்பார் மகட்குறுப்பிற்
சிறந்த விழியா மிருவயினும்
விரைத்தண் மலர்மார் பனும்வடிவேல்
விழிநங் கையும்வாழ்ந் துறைதருநாள்
வரைத்திண் புயச்செம் மலின்குரவர்
மகட்பே சுதற்கென் றெழுந்தனரே. (உ௬)

2205 பொற்று மரைப்போ தருமணியாற்
புணர்மா துளநன் கனிபுனைபூண்
நற்று தியர்பெட் டகநிறைத்து
நயந்தே யுடன்கொண் டெழப்பருவ
முற்று முலைக்கோ தையர்சிவிகை
முன்னே செலவாம் பரிகடவக்
கற்றூர் கடங்கா வதம்பலவுங்
கடந்தார் பகலுங் கங்குலுமே. (உ௭)

வேறு.

2206 ஒற்றைவான் பனைக்கைக் கரியினிற் பரியி
லொளிர்மணிச் சிவிகையிற் கவிகை
சுற்றயா வருநன் னிமித்தம துடனே
துளங்குபொன் னகர்ப்புறத் தணுகும்
அற்றைநா ளதன்வை கறையினிற் கனகா
சலமெனப் பணைமுலைக் கயற்கட்
கற்றைவார் குழலாட் குயிரெனு மிகுளை
கனவுகண் டெழுந்தனள் களித்தே. (உஅ)

2207 அன்னமென் னடையாய் நமதுபூம் படப்பை
யதனகத் தணிநிலா விரிக்கும்
புன்னைமென் றுணரால் வளங்கெழு பொழிற்கீழ்ப்
பொலங்கொடி பூத்தபொன் முகைமேன்
மன்னிய வடபா லிருங்தெழு சுரும்பு
மணந்துதே னருந்திவை கியதென்
றின்னண நிகழ்த்த நிகழ்த்தின டனைப்பார்த்
தீன்றதா யதன்றிறந் தெளிந்தே. (உகூ)

2208 பூந்துணர்ப் படப்பை நமதுபொன் மனைபொன்
மனையினுட் புன்னைமென் றுணரா
லேய்ந்ததண் பொழினித் திலமணிப் பந்த
ரேமநன் கொடியுமென் மலரும்
வாய்ந்த நற்றுயு நங்கையுஞ் சுரும்பிம்
மடந்தையை மணம்பெற வருசே
யாந்திரு மகட்கிங் கேழுநா ளகத்துண்
டாந்திரு மணமென வறைந்தாள். (௩0)

இவை தொடர்.

2209 அனைவருந் திடனி தெனக்களித் திடவே
யகலிடத் தருந்துதி யெனலாம்
புனைமலர்க் குழலாட் கிடதுகண் டுடித்த
பொலிவுடன் பொன்னிறு லமைத்த
மனைவயிற் பல்லி யிடந்தழீஇ வாவு
வழங்கலும் வைகறை கழிந்து
கனைகதிர்ப் பரிதி யுதயமால் வரைசேர்
காலையிற் கடிநகர் புகுந்தார். (௩௧)

வேறு.

2210 மையார் கருங்கட் செங்கனிவாய்
மடந்தை மரபிற் சிறந்தாருந்
துய்யா னுயர்வண் புகழ்க்காரி
தோன்...... மரபிற் சிறந்தாரும்
பையா டரவிற் றுயிலுவந்த
பரமன் புணர்நல் வினைத்திறத்தாற்
செய்யார் திருவண் பரிசாரத்
தொருங்கோர் மருங்கிற் சிவணினரே. (௩௨)

2211 கவளக் களிற்றின் புணர்மருப்பிற்
கதிர்த்த புளகக் களபமுலைப்
பவளத் துவர்வாய்த் தரளநகைப்
பனிமென் கமலம் புரைவதனக்
குவளை விழித்தெள் ளமுதமொழிக்
குயிற்பே டனுநுங் குலக்கொழுந்தா
மவளைத் தருதி ரெமதுகுலப்
புதல்வற் கெனவா தரித்துரைத்தார். (௩௩)

2212 குன்றுப் பழமைக் குடிப்பிறந்த
குலப்பண் பிளமை சீர்மையுடன்
பொன்றுப் புனிதத் திருவுடைமை
புவனம் புகழ்கல் வியின்றுறைபோய்

நன்ருய்ந் துணர்ந்த வுணர்வினெடு
நமர்போற் றமர்பற் பலருளரா
லொன்ருந் தலைமைத் தெமதுகுலத்
துதித்தாட் கிவனென் றுணர்ந்தனராய். (௩௪)

2213 முற்பாட் டியனுன் மறைக்கிழவன்
முதிய கிழத்தி திருவருளாற்
சொற்பாட் டினில்வண் டமிழ்ப்புலவோர்
துணிவுற் றுரைத்த வருந்துதிபோற்
கற்பாட் டியைவண் டினமுரா லுங்
கமழ்செங் கமலக் கிணைகவினும்
பொற்பாட் டியைமைந் தனுக்குமணம்
புணர்ப்பான் மகிழ்வுற் றனர்மன்னே. (௩௫)

தொடர்.

2214 இருவர் குறிப்புந் திருந்தியதா
லினியிங் குமது குலக்கொடியைத்
தருதி ரெனவே யவருமடத்
தகையைத் தருதிர் தருதிரெனப்
பருவ முலைக்கோ மளக்குயிலைப்
பாராட் டினராய் நீராட்டிப்
பொருவில் பசும்பொற் கொடியெனவே
புனைந்து கொணர்ந்தார் பொனங்கொடியார். (௩௬)

2215 வெண்பட் டமர்பொற் பலகையதன்
மிசையே யிருத்தி விழுமியதா
மொண்பட் டுடுத்திக் கலனலங்கல்
புனைந்தொண் களப நிறைத்ததற்பின்
கண்பெற் றுளமா துளங்கனிநன்
கதலிக் கனிநீ டரிசனத்தோ
டெண்பெற் றுளபொற் றுமரைப்போ
திலைபா கிவைகைத் தலத்தளித்தார். (௩௭)

வேறு.

2216 அருந்தினர் கருனே கூட்டி யமைத்துள வடிசில் வாசம்
பொருந்தின களப மள்ளிப் பூசினர் பொறிவண் டோடு
சுரும்பிமி ரலங்கல் வாங்கிச் சூடினர் பஞ்ச வாசந்
திருந்திய கவுளுட் கொண்டு சிந்தையுட் களிகொண் டாரே

வேறு.

2217 செங்கா லெகினப் பெடைநடைச்சே
யிழைதன் மணநா ளினைக்கணிதர்
தங்கா ரணத்தி னுணர்ந்தனராய்த்
தகுபோர்க் கழியா தவனெனவாழ்
எங்கோன் வருக திருமணமென்
றேட்டிற் பொறித்தே வலிற்பிழையா
தைங்கா வதமோர் கடிகையிற்சென்
றடங்கு கதித்தூ தரைவிடுத்தான் (௩௪

2218 நந்தா வளத்தூ துவர்குறுகி
நற்பா லுடையா னடிவணங்கி
யெந்தா யுனது திருமணமென்
றெழிலா வணம தளித்திடலுஞ்
சந்தார் களபத் தனிமார்பன்
றமரா லுணர்ந்தங் கதுகொணர்ந்து
வந்தார் தமக்கு மிருநிதிபொன்
மாரி யெனவே வழங்கினனே. (௩௫

21. பெண்பேசுசருக்கம் முற்றும்.

உஉ. எழுச்சிச்சருக்கம்.

2219 துளையார் குறும்பற் பணியுமிழ்ந்த
துளையா மணியிற் சிறந்தாளை
யிளையார் திலகன் பெறுமணம்வந்
தெழுநாட் கெழுநா ளெனவிருவர்
கிளையா யினரங் கொருங்குணர்வா
னறைவித் தனன்கேழ் கிளர்விசும்பின்
முளையார் பிறைக்கிம் புரிக்கோட்டு
மூரிக் களிற்றின் பிடர்முரசே. (க)

2220 செம்பொற் புரிசை மிதிலையினுட்
சனகன் புதல்வி மணமுரசன்
றும்பர்க் குவகை யளித்ததென
வொளிர்பொன் மவுலி புனைதருநாட்
டம்பித் துணையாம் பரதனுயிர்
தளிர்க்கத் தழங்கு முரசமென
விம்பர்க் குவகை தனைப்புரந்த
தெழின்மா மணமென் றறைமுரசே. (உ)

2221 தன்னே ருலகத் தெவரெனலாய்த்
தழைத்த புகழ்வண் காரியெனு
மன்னேர் திகழ்நன் மணம்புணர்வான்
வளருந் திருவண் பரிசாரத்
தென்னே வலின்வாழ் விணங்குபரி
வாரத் தவர்யா வருமெனக்கு
முன்னே படர்க படர்கவெனு
மொழிந்தா னளின முகத்தானே. (ங)

வேறு.

2222 குப்புடைக் கவளஞ் சருக்கரை குவவிக்
கொழும்பொன்னு லமைத்தகொப் பரையு
ணெய்யுடன் விரவிக் காழிலாக் கனிக
ணிறைத்தன ராயருத் தியபின்

பையுடை யரவி னருமணி குயின்ற
பசும்பொன்னே டையிற்படு மணியிற்
கையுடைப் பொருப்பை யலங்கரித் தனர்மாண்
கனைகழல் புனைகழற் குமரர்.

2223 கடலையும் பயறும் பதனமைத் தனராய்க்
கன்னலோ டருத்திய பின்னர்ச்
சுடர்விடும் பசும்பொற் கலனையு மமைத்துச்
சூத்திரி வாய்க்கொளீஇச் சதியி
னடனவி னடைக ளைங்கினுஞ் சிரத்து
நரைதிகழ் கவரியின் விசும்பிற்
படர்கதி யினவாம் புரவிபண் ணமைத்த
பகுதியும் வரம்பில்பற் பலவே.

2224 கனகதண் டிகையுஞ் சிவிகையு முத்தின்
கவிகையுங் கவினமைத் ததற்பின்
புனமயி லனைய சாயலா ருடனே
பொற்கலத் தின்னமு தருந்தித்
தனதனும் வியக்கத் தகுமணிக் கலனுந்
தாமமு மணிந்துசூ டுதலு
மனமகிழ்ந் தனராய்த் தமதமக் கமைத்த
வாகன முழுதுமூர்ந் தனரே.

2225 பிடிகளிற் களிற்றிற் கனகதண் டிகையிற்
பிறங்குபொற் சிவிகையி னுடங்கு
கொடிமணித் தேரிற் பண்டியின் முத்தின்
கோவைதாழ் பந்தரின் மிசைபோங்
கடிமலர்க் குவளைக் கண்ணிய ருடனே
காளைமா ரெனுமிவ ரல்லா
லடிநிலத் தினில்வைத் திடையிடை யேகு
மவர்களு முலப்பில்கோ டியரே.

226 வில்லுடன் வாளும் பலகையும் வெயில்போல்
வெயில்விரித் துளசுரி கைகளும்
அல்லினைப் பகற்செய் திருளினைத் துரத்து
மாற்.........க் கெதிர் குநரைக்
கொல்லும்வை வேலுங் குந்தமுங் கூர்த்த
குலிசமு மெடுத்தகை யினராய்ச்
செல்லுமுத் தமநற் றமரெனச் சிறந்த
சேனைகா வலருமெண் ணிலரே. (அ)

227 ஒட்டகங் களுக்குங் கைப்பதொன் றெனலா
முணுவினை யூட்டிய பின்னர்ப்
பட்டகத் தனவாய்ப் பருத்திநூ லனவாய்ப்
பலபல தொழில்பயின் றுளவாம்
புட்டகங் களும்புத் தேளிரும் விரும்பும்
பொலந்துகில் களுங்குளிர் பசும்பொற்
பெட்டகங் களில்வைத் தவற்றது பிடரிற்
பிணித்தெழும் புணர்ப்பொறை பெரிதே. (கூ)

228 வால்வளை நரலக் குடமுழா வுடனே
மழையெனத் தழங்கும்வார் முரசங்
கால்வளைத் தெழும்வன் கலினமா முழக்கங்
கடலெனக் குளிறுவ மதமா
நூல்வளைங் தநெனப் பணைமுலை சுமந்து
நுடங்குநுண் மருங்குலார் முன்கைக்
கோல்வளை முரலப் பரிபுர மலம்பக்
குமரர்பொற் கழல்சிலம் பினவே. (க0)

வேறு.

229 ஆடன் மங்கலக் கணிகையர் குரன்முத லனயாவும்
பாடன் மங்கல விறலியர் மதங்கர்பற் பலவாசத்
தோட விழ்ந்தமென் பூவிலை மங்கையர் தொகையோடுங்
கூட வந்தவந் தியர்கணந் தொகைசொலக் கூடாவே. (கக)

2230 தேரில் யானையி லிவுளியிற் சிவிகையிற் செல்கின்றார்
பாரி லேகுநர் வெயிலுறு தமைத்தபந் தரைமானக்
காரின் மீதுற நிழற்றுவ கரைபொரு திரைசான்முந்
நீரி னித்திலக் கவிகையும் பதாகையு நிரந்திட்டே. (கஉ)

2231 வெண்டுகிற்கொடிமுத்தவெண்கவிகையின்மீப்போய்விண்
மண்டு வெண்மதி யகட்டினை வருடிமீள் வனபாரிற்
பண்டை நின்மர பினர்வழிப் பாலகன் மணநாளைக்
கண்டு வாழ்ந்திட வருதியென் றழைப்பதோர் கதிமானும்.

2232 வெள்ளை வாரணப் பிடர்மலர்த் தவிசுளான் விருப்புற்றோர்
வள்ளை வார்குழை யாளிடந் தழுவமல் லிகைசூடிக்
கிள்ளை மென்மொழி யுமையொடுங் கயிலையங் கிரிமேல்வாழ்
பிள்ளை வெண்மதி சூடியிற் களியொடும் பெயர்கின்றான். ()

2233 வேறிலாளொருத் தியைமனை யிருத்திமா மேல்கொண்டான்
கூறி யேகுழி விழிகொடே வினள்குரு மணிமாடத்
தேறிநோக்குழித் திரிந்துநோக்கினளிழிந்தெதிர்கொண்டே
தேறி நின்றணைத் தவளொடுந் தேர்மிசைச் செல்கின்றான்.

2234 குயிலன்னாளுணர்த்தவுமுணர்ந்திலளைவன்கொடித்தேர்மேற்
பயில வைத்தொரு பார்த்திபன் பாறைமீ தூர்போழ்தி
னெயில்களாற்பொலியிலங்கைமன்கிளைத்தகுன்றெனவாடக்
கயிலை யாளியைத் தழுவிய வுமையெனக் களிக்கின்றார். ()

2235 சுண்ண வாடையா லொருத்தியை மதமலை தோடர்போழ்தி
னெண்ண மற்றவ ளிரிதரா வெதிர்ந்தவ ணிடைநின்றோ
ரண்ணல் யானையைத் தடுத்தொரு கரத்தினி லமர்செய்யா
வண்ண மாதரை யொருகரத் தணைத்திடு மகிழ்வுற்றே. ()

2236 தும்பி யீட்டம துடைக்களத் தொருபிடிச் சுவன்மேலோ
ரும்பல்வாடையேற்றணவனும்வெருவிமற்றொருபாய்மாக்
கொம்பின் மேயதோர் கொம்பினைத் தனதுகைக் கொடுத்தேயோர்
மொய்ம்பி னானுமுந் தானையி லிருத்திமெய் முயக்குற்றான்.

2237 புரைசையானையின்பிடர்மிசைப்பூண்முலைபுறம்போழ்வான்
விரைசெய்கோதையையிருத்தியேகுழிமிடைந்தெழுதூளி
திரைசெய் காலையில் விரகம தெழத்திரி தருநோக்குற்
றரைசெய்தொண்டைவாயமுதமுண்டுருகினனொருபூமான்.

2238 மைக்க ருங்கண்மா மடந்தையோர் மழவினை வழிமீதே
யொக்க லைப்புறத் தணைத்தெழு தலுமிடித் தொருபோர்மா
வக்க ணத்தணு கிடவெரு வினளர னெனவேகொங்
கைக்க ளிற்றினோ டணைத்தவன் களிற்றினைக் கடிகின்றான்.

வேறு.

2239 சிறுபிடிப் பிடர்மேன் மடந்தையை யிருத்தித்
திரள்புயத் தொருகரந் தாங்கி
வெறுநிலத் தெழுவான் பிறிதொரு மடந்தை
விரகநோக் கெதிர்குறு நகைக்கேய்
குறியினைக் குறிப்புற் றிழிந்திரிதருமக்
கொம்பினைத் தொடர்வுழி யோடப்
பெறுபிடி யினைப்பா கனைநிலத் திழித்துப்
பின்பிடித் தெழுமொரு களிறே. (உக)

2240 கட்படாஞ் செறித்த பொருதனிக் களிற்றிற்
கதிர்செய்வே லொன்றுடன் கோழிப்
புட்பதா கையன்போற் படர்பவன் முனம்போம்
பொனங்கொடி தன்னைமான் மதங்கூர்
தட்பவெங் களப மிரண்டொடு நயனத்
தாமவே லிரண்டொடும் புறஞ்செய்
நட்பினுக்கேது வெவனெனத் திரிந்தா
ணகைக்கெதிர் நகைத்துளங் களிப்பான். (உஉ)

2241 ஆடையா பரண மணிந்தெழு குமர
னயல்வரு மாதர்மேல் விழிசெல்
பீடையாற் கடவு நெறிமறந் திடத்தன்
பெருவலி யுடன்படர் மதமாக்

கோடையா னதுருப் பனிமலர் துவன்ற
குளிர்பொரு நையந்தடங் குடையா
வோடைமால் வரையென் றுரைப்பதுண் மையெனு
வுரைப்பராங் குடனெழு பவரே. (உங)

2242 அம்பொன்மா ணிழையார் படர்பிடி யிணைச்சென்
றடுகளி றணவலு மவைதாம்
வம்புலாம் பொழிற்கண் வாரியிற் கடிதாய்
மறிதரு பொழுதவர் வெருவித்
தம்பமா மெனப்பூங் கொம்பர்தா யதனுற்
றமனியக் கொடிதழீஇ யதனுற்
கொம்பரோன் றினர்தண் கொடியொடொன் றினர்க
ளெனுந்திறங் கொடுத்ததக் குலமே. (உச)

2243 பனைக்கைமால் யானை மதநதி நடிக்கும்
பரிக்குர முழுதுக ணிலத்தை
நனைக்கையா லளறு படுதடத் திடையே
நடந்தடி யிழுக்குபு விழுவா
டனைக்கையா லெடுத்தோர் காளைமார் பணைப்பத்
தனதுகா தலிதழல் விழித்தே
நினைக்கையான் முலைமே னூறுமான் மதங்கண்
ணீரினு லளறுபட் டனவே. (உரு)

2244 குங்குமக் குழம்பாற் கரும்பினை யெழுதுங்
கோலமென் றோளினு ளொருத்தி
யிங்கிதக் குறிப்பா னகைத்தனள் கடைக்க
ணெறியவே யெதிர்நகைத் தணுகி
யங்கொரு குமரன் முருகவே ளயிலு
மாடல்வேண் மூரிவிற் கரும்பும்
பொங்கிள முலையாய் பறித்ததென் றெவர்தாம்
பொருகள மெவணெனப் புகல்வான். (உசா)

2245 தேரினைக் கடாவி யொருதனிக் குமரன்
செல்வுழி யவன்றடங் தேர்ப்பின்
பாரினிற் படர்வா ளொருதனி மடந்தை
பார்த்திர தியைப்பிரி மதன்போ
னீர்தனித் தெழுவ தெவனென வெனக்கு
நீரல்லா திரதியாய்ச் சிறந்தார்
யாருள ரெனவே யிழிந்தணைத் தெடுத்தங்
கேற்றினன் கடாயின னிரதம். (உஎ)

2246 உணர்ந்திடா தவளை மேனிலத் திருத்தி
யூர்திமேற் படர்பவன் முனமோர்
அணங்குவஞ் சனையாற் றளர்ந்துழை தலுமங்
கவளையேற் றியதுறீஇப் பிடிமேற்
கணந்தனில் விரைந்து குறுகுவா ளெதிரே
கனகதண் டிகையினி லெதிரா
மணந்தவ ளெவண்டே ரெவனென வுரைப்ப
மறைத்தவள் புலவியைத் தணித்தான். (உஅ)

2247 கடம்பாரந் தளறு படும்வெறு நிலத்துக்
கறையடி யிழுக்கவு மாக
நடம்பயின் றதுவாய்ப் பொறையொடு மெல்ல
நடந்துமாற் றினைக்கடந் தெழுமாத்
தொடர்ந்ததம் மனப்பற் றலைத்திட வலையாத்
தொடர்பொடுந் துறவுபூண் டதன்மேற்
படர்ந்துமுத் தியைச்சேர் மனவலி படைத்த
பரமஞா னியைப்பொரு வருமே. (உகூ)

2248 முற்றிழை மகளிர் துணைமுலைக் குவடு
முழுகிய மான்மதக் குழம்பும்
வெற்றிவேற் குமரர் வயங்குபூண் மார்பின்
வெண்டளக் கலவையு நெருக்குண்
டொற்றியொன் றியதோ டுள்ளமும் விலைப்பட்
டொழுகியே யொதுங்கிநின் றனராய்க்
கொற்றவெண் குடைக்கீழ் நாளிடைப் படர்வார்
கூட்டம்பார் தொகைகுறிப் பவரே. (௩0)

2249 இன்னணங் களிப்புற் றூணையிற் பிழையா
திருநில னெளியவே யீண்டி
முன்னிரைத் தனராய் மடந்தைமா ருடனே
முதியரு மிளையரும் படரப்
பன்னருந் தவமுந் தருமமுந் தழைப்பான்
பரந்தநூற் கேள்வியுட் பழகும்
பொன்வரை யெனவே பணைத்ததிண் புயவண்
போர்க்கழி யார்திறம் புகல்வாம். (ந௩க)

2250 துறைகெழு புனலுட் படிந்துள நியமத்
துறைகழித் துணர்வைநே ரொடுக்கி
மறைமொழிக் கடங்காத் திருமகள் கொழுநன்
மலரடி வணங்கிய பின்னர்
நிறைமொழி மாந்த ரந்தணர்க் கமைத்த
நிதிமுகந் திறைத்திடா நிறைநோய்
பொறையுடை மனைவி பொற்கலத் தேந்தப்
புதல்வனோ டின்னமு தயின்றான். (ந௩உ)

2251 பொலந்துகி லுடுத்து மான்மதம் பூசிப்
பொன்னிடை நவமணி குயின்ற
விலங்குபூ ணணிந்து மலங்கல்சூ டினரா
யிளமையும் வளமையும் பயின்ற
நலம்புனை மனைவி தன்னைநித் திலத்தா
னயந்தநற் சிவிகையி லிருத்திக்
குலம்புரி யுழையர் தம்மையும் விருப்பிற்
கூவிமுன் பேவினன் மகிழ்ந்தே. (ந௩௩)

2252 பொறியறை யினவாங் கூன்முத லியதாம்
போற்றலும் பலகையி னுடனே
யெறிசுடர் வடிவா ளஃகமுத் தலைவே
லேந்திரு கரத்துட னிழல்போற்
குறியுட னகலா தியங்குமங் கையர்தாங்
கூண்டுபல் லாண்டென விமையோர்
வெறிகமழ் நறுமென் மலர்சொரிந் திடவே
வீதிசென் றடைந்தனள் விமலை. (ந௩௪)

வேறு.

2253 நுண்ணிய மறைக ளுண்மை நுழைபுல வியர்தாஞ் சொன்ன
புண்ணிய புராணங் கற்ற புலமையிற் கணித நூல்கற்
றெண்ணியசடங்கர் தாமுமிளங்கதிர்பொருவுஞ்செம்பொன்
வண்ணவொண்சிவிகைமீதேமறையவர்குழாத்திற்சென்றார்.
2254 காமர்பூண் வனப்பிற் பூண்டு கவுட்கடாக் களிற்றின்முத்தின்
றாமவெண்குடைக்கீழ்ச்செய்யதண்கதிர்விரிக்குஞ்சான்றோ
னேமமீ ரருவி வெற்பி லிந்துமேல் வரவே வந்த
தாமென வெழுந்தான் காரி யெனப்புக ழறிஞர் கோமான்.
2255 குலந்தகை பருவஞ் செல்வங் கோதிலாக் கல்வி வாய்மை
நலம்பொறை கவிகை யொன்று நனியிரு மரபி னுள்ளாய்க்
கலந்தநன் குமர ரெல்லாங் கவின்சலஞ் சலத்தைச் சூழ்ந்த
வலம்புரி யீட்டம் போன்றெம் மருங்கினும் வளைத்தார் மன்னே. ()
2256 மதியினைச் சூழ்ந்த மீன்போன் மழவர்சூழ் குழக னன்னீர்
நதியினைக் கடந்து தோன்ற நயந்ததென் கரையிற் சந்தப்
பொதியநன் மலைப்பூந் தென்றற் பொன்னடி வருடல் பொன்னைப்
பதியினிற் கலத்தற் கொல்லை வருகெனப் பணிதன் மானும்.
2257 தினகர னுதயஞ்செம்பொற்குன்றின்மேற்சேர்ந்ததென்னப்
பனகநன் மணிகண் முற்றக் குயிற்றிய பான்மைத் தாகுங்
கனகதண் டிகையின் மீதே காரியைப் பயந்த செல்வத்
தனகனு மெழுந்தான் விண்ணோ ரலர்மழை பொழிந்தா ரன்றே. ()
2258 தேசிகர் முத்தின் பந்தர் முன்செலச் சிவிகை மேற்சேர்ந்
தாசிகண் மறையோர் கூற வருந்தமிழ்ப் புலவர் சூழ்ந்து
மாசற வடித்த செஞ்சொன் மங்கலப் பாடல் கூறப்
பாசிழை மகளிர் பாடற் பண்ணொலி பரந்த தன்றே. (௪0)
2259 இடிக்குரற் களிறு மாவு மெழின்மணித் தேரு மூர்ந்து
நடித்தெழு புழுதி செம்பொன் னாட்டுள தடங்க டோறும்
பொடித்தபொற் கமலப் போதும் புலவர்பங் கயமா மென்ன
வடித்துறை கொளுத்து மாறவ் வாவியுட் படிந்த வன்றே.
2260 கோவலர்மயிலைத்தோய்ந்தபுயல்குறுங்குடிக்குச்சேய்த்தோர்
காவதங் குணக்க தாநாட் டாறதன் காமர் தென்பாற்
பாவலர் புகழ்வ தொன்றும் வெள்ளநீர்ப் படப்பை தன்னை
மேவின னேவல் பூண்ட வெள்ளமு மிறுத்த தாங்கே. ()

வேறு.

2261 கூற்ற மோரிரண் டாமெனும் விழியினர் கொலைவேலா
ரேற்ற மாயுவந் தேறிய விவுளியு மதமாவு
மாற்றல் சால்கதி யடக்குபு படியமைத் தனராகிப்
போற்ற லாற்பணித் திழிதலும் பொதும்பருள் புக்காரே.()

262 அந்த ரத்தய னால்வகைத் தேவரு மடிபோற்று
மிந்தி ரற்கென வமைத்தபொன் னகரினு ளிறையோனாற்
றந்த வைந்தருத் தடங்கடற் றரணியுள் ளவர்வாழ்வான்
வந்த தாமென மைந்தரு மகளிரு மனத்துற்றார். (சச)

3 சந்த கிற்குலம் பலவுமா வரம்பைசண் பகத்தோடும்
பந்தர் செய்தெழு சோலையுட் பரனடி யவர்நம்பால்
வந்து வைகின ரென்னவே வணங்கிவாழ்த் துவதேய்ப்ப
முந்த வாவியுட் குவிந்தவி ழாம்பன் முண்டக மன்னோ. ()

2264 இறந்து ளார்களி லினிப்பிறப் பார்களி லிருப்பாரிற்
சிறந்து ளான்பரி-வாரமோ டெய்தலிற் சினைநின்றுந்
துறந்த காய்கனி திரைகொழி நித்திலத் தொகையோடும்
பிறங்க மேவசிறப் பமைத்துள பிரப்பெனப் பீடெய்தும். ()

வேறு.

2265 கோங்கரும்பிணையும்வாழைக்கொழுமுகைபிணையுங்கண்டார்
பாங்கர்வந் தமைந்த மாதர் பணைமுலைச் சுவடும் பார்ப்பா
ரோங்குபைங் கமுகிற் செங்கா யுறுமிட றதனைக் கண்டார்
பூங்குழை தழீஇய காமர் புனைமணி மிடறும் பார்ப்பார். ()

2266 கொண்டலு மிடைவ தாகக் கொழுமடல் விரித்த வாழைத்
தண்டினைக்குருகச்சென்றேதடக்கையாற்பரிசங்கொண்டுங்
கண்டவர்மடந்தைமார்மேகலையுடைக்குறங்கிற்கொப்பென்
றொண்டமிழ்ப் புலவர் கூறு முறைதவ றுளதன் றென்பார்.

2267 குயின்மொழி யிணையுங் கிள்ளைக் குதலைமென் மொழியுங் கேட்டார்
அயில்விழி மகளிர் வாய்மை யமுதெனச் செவியுட் கொண்டார்
வெயினுழைந் தறியாச் சோலை வீதிவா யெகினப் பேடை
பயினடை யிணையுங் கண்டார் பாவைமார் நடையி தென்பார். (சக)

2268 தூதுளங்கனியுஞ்செவ்வித்தொண்டையங்கனியுங்கொம்பர்
மாதுளம் போதுங் கண்டார் மருந்தினு மினிய தொன்று
மாதரம் பெருகப் பான மளித்திடு மளிய மாதர்
சீதளக் காழில் செவ்வாய்க் கனியையுந் திரும்பிப் பார்ப்பார்.

2269 மாந்தளி ரிணையுங் கொம்பர் வளர்மயி லிணையுங் கண்டார்
ஏந்திள முலையார் சாயற் கிவைபொரு வியைந்த தென்பா
பூந்துணர் மலிந்த செவ்விப் பொனங்கொடியதனைக் கண்டா
ஆய்ந்தவ யவங்கொ ணல்லா ரவயவிக் கமைந்த தென்பா

2270 வார்புறம் பொதிர்த்த கொங்கை மகளிரு மைந்தர் தாமு
வேர்புறம் பொடித்த மேனி விரைகமழ் சுண்ண மூட்டி
சீர்புறம் பயில்வ தாகத் திமிர்ந்தபின் றிரைக்கை யாற்
ணீர்புறம் பெறிந்த முத்தி னிலவெழு தடத்தைச் சார்ந்தார்.

2271 தூயபைந் தடத்துட் கஞ்சத் துணைக்கயல் வள்ளை மீதிற்
றூயபின் மறித்து மத்தா மரையினிற் றூய துற்றூர்
காயமோ டியிரு மொன்றாய்க் கலந்துளார் வதனத் துள்ளாஞ்
சேயரிக் கருங்கண் காதிற் சேர்ந்துமீள் செயலி தென்பார்.

2272 கரையினிற் கொவ்வை தூய கனிகளி னருகு தெண்ணீர்த்
திரைகொழி தரளக்கோவைதெண்ணிலாவெழுப்பக்கண்டார்
வரைபுரை புளகக் கொங்கை மாதரா ரதரத் துள்ளாய்
நிரைபயின் முறுவல் கூர்வெண் ணிலாவெழுங் குறியி தென்பார்.

2273 நைவள மிழற்றுந் தும்பி நயந்துதா தளையுங் காமர்
நெய்தலுங் குமுதப்போது நிரைத்தநீர்த் திரையிற் சாய்ந்த
சைவல மதன்மேற் சாய்பொற் றூமரை மலர்தம் மாதர்
மைவளர் குழலிற் பூண்பொற் றூமரை மருட்டிற் றென்பார்.

2274 ஆற்றல்சா னளினப் போதங் கவிழ்ந்ததே னருந்தி யுள்ளத்
தேற்றம திழந்து தாய சிணைவரா லடியிற் சார்தல்
ஏற்றம துடைய மாத ரிருகணைத் தாட்கி யாமே
தோற்றனமெனவேவீழ்ந்துதொழுதகைத்திதுவுமென்பார்.

2275 தளையவிழ் நளினப்போதிற் றவழ்திரை கொழித்த முத்தின்
இளையவை துவன்றித் தோன்றுங் கெழுதகை குறிக்கொண் மைந்தர்
முளையெயிற் றரிவை மார்புன் மூரல தெழுப்பி மோகம்
விளைதருமுகத்திற்றோன்றும்வியரையுங்குறிக்கொள்வாரே